பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 22 ஐப்பசி 1 ஜுல்-கஜ் 7 இதழ் 248

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 17 - 10 - 80

UNIVERSITY OF SRI LANKA, JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED
1980-10-21
PERIODICALS DIVISION

## தெஹ்ரான் - அபடான் தொடர்புகள் துண்டிப்பு!

### ஈராக் படைகள் சுற்றி வளைத்தன

லண்டன், அக். 16

ஈரானின் முக்கிய எண்ணை உற்பத்திநகரமான அபடானை ஈராக்கிய படைகள் சுற்றி வளைத்துவிட்டன என்றும் அபடானுக்கும் தென் ஈரானுக்கு மிடையேயுள்ள தொடர்பை ஈராக் படைகள் துண்டித்து விட்டன என்றும் ஈராக் அறிவித்துள்ளது.

அபடானைச் சுற்றி வளைக்க ஈராக்கிய படைகள் விரட்டியடிக்கப்பட்டன என்று ஈரான் வானொலி அறிவித்தது.

அன்று நடைபெற்ற கடும் சமரில் 100 ஈரான் துருப்புக்களை ஈராக்கிய படைகள் கொன்றுவிட்டன என்றும் 2 ஈரானிய விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன என்றும் ஈராக் தெரிவித்துள்ளது.

## முப்படைகளின் பாதுகாப்புடன் பரபரப்பான சூழ்நிலையில் சபை கூடியது

# சிறிமா குடியுரிமை இழந்தார்

# பாராளுமன்றம் தீர்மானம்

## கூட்டணி-சுதந்திரக்கட்சி எதிராக வாக்களிப்பு

### 'அமிரி'ன் ஒழுங்குப்பிரச்னை நிராகரிப்பு

(நமது நிருபர் சு. மகாலிங்கசிவம்)

முன்னுள் பிரதமரும், அத்தனகல எம். பி. யுமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, முன்னுள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோரின் குடியுரிமைகளை ரத்துச்செய்வதுடன் திருமதி பண்டாரநாயக்காவை பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றும் பிரேரணைகள் நேற்றிரவு 11-25 மணியளவில் பாராளுமன்றத்தில் நிறைவேறியது.

திருமதி பண்டாரநாயக்கா தொடர்பான பிரேரணைக்கு ஆதரவாக 139 பேரும் எதிராக 18 பேரும் வாக்களித்தனர். திருமதி பண்டாரநாயக்கா வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. திரு. பண்டாரநாயக்கா தொடர்பான பிரேரணைக்கு ஆதரவாக 139 பேரும் எதிராக 19 பேரும் வாக்களித்தனர். கூட்டணி உறுப்பினர்களும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் பிரேரணைகளை எதிர்த்து வாக்களித்தனர்.

ஈழத்தின் சரித்திரத்தில் முன்னர் என்றுமே இல்லாத வகையில் முப்படைகளின் பூரண பாதுகாப்புடன் பெரும் பரபரப்பான சூழ்நிலையில் பாராளுமன்றம் நேற்றுக் கூடியது.

பாராளுமன்றத்தைச் சுற்றிலும் சுமார் அரை மைல் தூரத்துக்கு பாதுகாப்புப் படையினர் காவலில் ஈடுபட, பாராளுமன்றத்துக்கு முன்பாக கடலில் கடற்படையினர் ரோந்து சுற்ற, பாராளுமன்றத்துக்கு மேலாக விமானப்படையினர் ஹெலிகாப்டர்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கவனிக்க, நேற்று பிற்பகல் சரியாக மூன்று மணிக்குப் பாராளுமன்றம் கூடியது.

11-05 க்கு ஆரம்பமான வாக்கெடுப்பு 11-25 க்கு முடிவடைந்து சபை ஒத்தி வைக்கப்பட்டதும் திருமதி பண்டாரநாயக்கா முதலில் திரு அமிர்தலிங்கத்திற்கும் திரு. எம். சிவசிதம்பரத்திற்கும் கைகொடுத்தார். பின்னர் டாக்டர் தகநாயக்காவும் திரு. எம்.டி.எச். ஜெயவர்த்தனவும் திருமதி பண்டாரநாயக்காவுக்குக் கைகொடுத்தனர். அடுத்து முன்னுள் பிரதமர் பிரதான வாயில் வழியாக வெளியேறி மகனுடன் காரில் சென்றார்.

### ஒழுங்குப் பிரச்னை

இந்த விவகாரம் நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருப்பதால் இப்பிரேரணை மீதான விவாதத்தைநடாத்தக்கூடாது என்ற எதிர்க்கட்சித் தலைவரின் ஒழுங்குப் பிரச்னையைச் சபாநாயகர் நிராகரித்ததைத் தொடர்ந்து விவாதம் நடைபெற்றது.

[8-ம் பக்கம் பார்க்க]

## கொத்மலை எம். பி. வெளியேற்றப்பட்டார்

### 2 வாரங்களுக்குத் தடை

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டதற்காக கொத்மலை எம். பி. திரு. ஆனந்த தசநாயக்கா சபையிலிருந்து வெளியேற்றப்பட்டதோடு, 2 வாரங்கள் சபை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும் அனுமதி மறுக்கப்பட்டது:

குடியுரிமை ரத்துப் பிரேரணை மீது பிரதமர் பேசிக்கொண்டிருந்த சமயம் அடிக்கடி அவரது பேச்சில் குறுக்கிட்ட திரு. ஆனந்த தசநாயக்கா, சபாநாயகரது எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது பல தடவை தொடர்ந்தும் குறுக்கிட்டார்.

சபாநாயகரால் இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின்னரும் கூட பிரதமரின் பேச்சில் குறுக்கிட்ட திரு. தசநாயக்கா, சபையை விட்டு வெளியேறுமாறு சபாநாயகர் விடுத்த உத்தரவையும் ஏற்க மறுத்தார்.

இதை அடுத்து பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா கொத்மலை எம். பி.யை சபையிலிருந்து வெளியேற்ற பிரேரணை ஒன்றை சமர்ப்பித்தபோது அதை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 133- ஆதரவாகவும் 19 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

அப்போது சபையில் பெரும் கூச்சல் நிலவியது. திரு. தசநாயக்காவை நோக்கி புத்தகங்களையும் சிலர் வீசினர்.

சபாநாயகர் மடைக்கலச் சேவிதரை அழைத்து திரு. தசநாயக்காவை வெளியேற்றுமாறு உத்தரவிட்ட பின்னர் சபையை விட்டு வெளியேறினார். சேவிதர் வந்தபோதும் அவர் வெளியேற மறுத்துவிட்டார்.

அடுத்து சேவிதர் சுமார் 10 பொலிசாரை அழைத்து வந்து திரு. தசநாயக்காவை அவரது இருக்கையிலிருந்து தூக்கிச் சென்றனர். அப்போது எழுந்துநின்ற சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பொலிசாரிடமிருந்து திரு. தசநாயக்காவைப் பறித்தெடுக்க முயன்றனர்.

இச்சமயத்தில் பொலிஸ் மா அதிபர் திரு. அனுசெனவிரத்ன கலரியில் இருந்தார். (ம-இ)

## எனது விலங்கை உடைத்து விரைவில் திரும்புவேன்

### சபையில் சிறிமா சபதம்

(கொழும்பு)

அதிகார ஆசை பிடித்தவர்களினல் பாராளுமன்றத்திலிருந்து இன்று வெளியேற்றப்படும் நான் விரைவில் மக்களை சோஷலிசப்பாதையில் திரட்டி எனக்கு இடப்பட்டுள்ள விலங்குகளை உடைத்துவிட்டு மீண்டும் பிரவேசிப்பேன்.

இவ்வாறு முன்னுள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் நேற்றுக் கூறினர்.

அவரது குடியியல் உரிமைகளை ரத்துச்செய்தும் பிரேரணை மீது அவர் இரவு 8-17 முதல் 9-17 மணிவரை பேசினர்.

பாரளுமன்றத்தில் தாம் நடத்தும் கடைசிப் பேச்சு என்றும் இதனை இடையூறன்றிப் பேச அனுமதிக்கும்படியும் கேட்டுக்கொண்ட திருமதி பண்டாராநாயக்கா மேலும் கூறியதாவது:-

எனது அரசியல் வாழ்வை படிப்படியாக அளிக்கவே இந்த முயற்சி நடைபெற்று வருகிறது.

1959-ம் ஆண்டு செப்டம்பர் 26-ம் திகதி எனது கணவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டபோது நானும் எனது பிள்ளைகளும் அனுதைகளாக விடப்பட்டோம். அன்று அரசியலில் பிரவேசிக்கும் நோக்கம் எனக்கில்லை. எனினும் கட்சியினதும் நாட்டு மக்களினதும் நலன் கருதியே நான் சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றேன்.

12 ஆண்டுகள் பிரதமராக

(8-ம் பக்கம் பார்க்க)

## "நீதிமன்ற பரிசீலனையிலிருப்பதால் சுதந்திரமாக பேசமுடியாது"

### ஒழுங்குப் பிரச்னை மீது 'அமிர்' வாதம்

(கொழும்பு)

"உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருக்கும் விடயம் தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதிக்கும்போது உறுப்பினர்களால் சுதந்திரமாக பேசமுடியாதிருக்கிறது" என்று எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று பாராளுமன்றத்தில் கூறினர்.

திருமதி சிறிமா பண்டாரநாயக்கா திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோரின் குடியுரிமைகளை ரத்துச் செய்யும் பிரேரணைமீது ஒழுங்குப் பிரச்னை ஒன்றை கிளப்பிய போதே திரு. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

"ஏற்கனவே இரண்டு தடவைகள் இந்த சபையில் நான் ஒழுங்குப் பிரச்னைகளைக் கிளப்பியுள்ளேன். ஆனல் அவற்றுக்கும் இதற்கும் வித்தியாசம் உண்டு" என்றும் கூறிய திரு. அமிர்தலிங்கம் தமது வாதத்திற்கு [illegible] பெற்ற சட்ட நூலாளரான திரு. எஸ்க்கின்மே எழுதிய பாராளுமன்ற நடைமுறைகள் என்ற நூலின் 18 வது பதிப்பையும் ஆதாரமாகக் காட்டி உரையாற்றினர்.

சட்டமூலத்தைத் தவிர நீதிமன்றத்தின் பரிசீலனையிலுள்ள வேறு எதனையும் விவாதிக்க முடியாது என்று திரு. எக்ஸ் [illegible]

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பதிவுசெய்யப்படாத டெலிக்கா வான், போட்வான் விற்பனைக்குண்டு. ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7084

எங்களிடம் 10 அடி நீளமும் 6 அடி அகலமும் உள்ள கடைத் தேவைக்கு உரிய கண்ணடி சோக்கேஸ் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீ கிருஷ்ணா ரேடேஸ், 92, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 7075

### வகுப்புகள்

நாட்டிய தாரகை நடனமணி செல்வி ரேலங்கி செல்லையாவின் பரதநாட்டிய நடன வகுப்பு. புதிய மாணவிகள் 19-10-80 விஜயதசமி தினத்தன்று கொக்குவில் கலைக்கோவில் அமரகலா நாட்டியாலயத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். சங்கீதம், மிருதங்கம், வயலின், குச்சுப்பிடி, கதகளி வகுப்புக்களும் நடைபெறும். 7100

19-10-1980 விஜயதசமியன்று காலை 9-11 மணியளவில் புது மாணவிகள் வீணை வகுப்புகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். 33, [61] தேவாலய வீதி, (CHAPEL STREET), யாழ்ப்பாணம். தொலைபேசி: 390. (7108)

### தேவை

கண்ணடித் தொழிற்சாலையில் கூலி வேலை செய்வதற்கு உடனடியாக ஆண்கள் தேவை. நாளொன்றிற்கு 15 ரூபாவரை சம்பளமாகக் கொடுக்கப்படும். நேரில் வரவும். சேவி கிளாஸ் அன்ட் மெட்டல்வேக்ஸ், நீர்வேலி. 7091

நன்றாய் வேலைசெய்யக்கூடிய ஆண், பெண் தொழிலாளர் தேவை. நேரில் வரவும். அரஸ்கோ இன்டஸ்றீஸ், 163, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 7106

மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவமுள்ள கார் சாரதி உடனே தேவை. நேரில் வரவும். அரஸ்கோ இன்டஸ்றீஸ், 163, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 7105

### பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 27-10-1980ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology 9/1, Stanley Road Jaffna. 7107

## கேள்வி விளம்பரம்

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கிட்டத்தட்ட 4000 (நாலாயிரம்) வெற்றுச்சாக்குகள், வெற்றுப் பரல் (45 கலன்) என்பன கேள்வி மூலம் விற்பனைக்கு உள்ளன. ரூபா 100 (நூறு) தலைமைச்சங்கத்தில் கட்டி கேள்விப்படிவத்தை பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே 100 கட்டிய விண்ணப்பகாரர் இம்முறை கட்டத் தேவையில்லை. கேள்விப்பத்திரங்கள் யாவும் 21-10-80 திகதிக்கு முன் பதிவுத்தபால் மூலம் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்குகளுக்கான கேள்வி" எனக் குறிப்பிடல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி
பல நோ. கூ. சங்கம்,
பளை.
7109

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை தென்கிழக்கு, அத்தியடி, புதுவீதி, 12-ம் இலக்கத்தினைச் சேர்ந்த செல்லத்துரை நாகராஜா பெண் இந்திரா தேவியின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்

— மரணமெய்தியவர்

மரணச்சொத்து
நியாயாதிக்கம் இல: 3460

செல்லத்துரை நாகராஜா,
இல: 12, புதுவீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
— மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில், *அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1979-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14-ந் திகதியன்று முற்பகல் 10-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1979-ம் ஆண்டு ஆடி மாதம் 26-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.

தயாரித்தது:
**வ. பரமானந்தம்,**
மனுதாரின் பதிவுபெற்ற தரணி.

4-7-1980 காரணம்காட்டும் திகதி 17-10-1980க்கு நீடிக்கப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்,

7104

## அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

### மரம் ஏற்றி வருவதற்கு லொறிகளைப் பதிவு செய்தல்

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் டிம்புலாகலை மரக்காலையில் இருந்து (மன்னம்பிட்டியில் இருந்து 5-ம் கட்டை) குத்தி மரங்கள் ஏற்றி வந்து அரசாங்க மரக்கூட்டுத்தாபன குடாநாட்டு மரக்காலைகளில் பறித்து அடுக்குவதற்கு லொறிச்சொந்தக்காரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களை கந்தோர் நேரத்தில் என்னிடம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதேச முகாமையாளர்,
வடபிரதேசம்,

அரசாங்க
மரக் கூட்டுத்தாபனம்,
25, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 349
(7059)

## நினைவு விழா

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் வித்தகர் திரு. செ. தனபாலசிங்கனின் நினைவுவிழா எதிர்வரும் 20ம் திகதி திங்கள் மாலை அவரது பிறந்தகமான உரும்பராயில் சிதம்பரசுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய பிரதம கணக்காளர் திரு. மு. பசுபதி தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பிரார்த்தனை உரையும், சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி 'திருமுருகன் திருவருள்' என்ற தலைப்பில் சிறப்புரையும் நிகழ்த்துவார்.

செல்விகள் சுகந்தி மகேந்திரன், சியாமளா சோதிலிங்கம் குழுவினரின் பக்திப்பாடல் இசை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளது. (அ)

## கேள்வி விளம்பரம்

### கிளிநொச்சிப் பட்டணம் கிளிநொச்சி

கிளிநொச்சிச் சந்தையில் இரண்டு ஆட்டிறைச்சிக்கடைகளும், இரண்டுமாட்டிறைச்சிக் கடைகளும்பரந்தன்சந்தையில் ஒரு ஆட்டிறைச்சிக் கடையும் ஒரு மாட்டிறைச்சிக்கடையும் அமைத்து01-01-1981 தொடக்கம் 31-12-1981 வரைக்கும் கட்டுப்பாட்டு விலைக்கு இறைச்சி விற்பனை செய்வதற்கான கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் முறையே ரூபா 300/- கேள்விப் பிணைப்பணமாகவும், ரூபா 25/- கேள்விப் பத்திரப் பணமாகவும் செலுத்துவதன் மூலம் 5-11-1980நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம் ரூபா 25/- மீளளிக்கப்படமாட்டாது.

கேள்விகள் அரக்குமுத்திரையிடப்பட்டு 'விசேட ஆணையாளர்' பட்டணசபை அலுவலகம், கிளிநொச்சி எனவிலாசமிடப்பட்டு 13-11-1980 நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாது கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மேலுறையின் இடது பக்கத்தில் கேள்வியின் பெயர் குறிக்கப்பட்டு இருத்தல் வேண்டும். குறிப்பிடப்பட்ட திகதிக்குப் பின்னர் எக் காரணம் கொண்டும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. கணேஷ்,
விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட ஆணையாளரின் பணிமனை,
கிளிநொச்சிப் பட்டணம்,
09-10-1980. 7110



ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஸ்ரீ ஆத்மஜோதி அச்சக அதிபரும், ஓய்வு பெற்ற ஆசிரியருமான நாவலப்பிட்டி திரு. நா. அருமைநாயகம் சமாதான நீதவானாக நியமனம் பெற்றுள்ளார்.

மலையகத்தில் சமய சமூக சேவைகளிலும், கூட்டு வழிபாட்டின் மூலம் தோட்டங்கள் தோறும் சமயப்பணி புரிவதில் ஈடுபாடுடைய இவர் சமாதானநீதவானாக நியமிக்கப்பட்டதைப் பாராட்டுமுகமாக நாவலப்பிட்டி நகரப் பொதுமக்கள் மாலைகள் சூட்டி ஊர்வலமாக அழைத்துச் சென்று நாவலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவிலிலும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்திலும் வரவேற்பளித்து கௌரவித்தனர். அந்த வழிபாட்டின்போதும் வரவேற்பின்போதும்கலந்துகொண்ட நகரப்பொதுமக்களோடு படத்தின்மத்தியில்திரு. நா அருமைநாயகம் நிற்பதைக் காணலாம்.

## ரூ. 36,000 தங்கநகை கொள்ளை:

# சந்தேகநபர்களுக்குத் தொடர்ந்து விளக்கமறியல்

(பண்டத்தரிப்பு)

நவாலி குருக்கள் மடத்தடியிலுள்ள வீடொன்றில் பட்டப்பகல் நேரத்தில் ஜன்னலைப் பிரித்து உட்புகுந்து 36 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், புடவைகள் ஆகியவற்றை கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாக ஆனைக்கோட்டைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த 2 பெண்கள் உட்பட 4 சந்தேக நபர்களை மீண்டும் யாழ் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தபோது நான்கு பேரையும் எதிர்வரும் 21ம் திகதி வரை தொடர்ந்து விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

இவர்களைப் பிணையில் விடுமாறு இவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கேட்டுக்கொண்ட போதிலும் நீதிபதி பிணையில் விடமறுத்து, தொடர்ந்து றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

## நிர்வாகிகள்

(மன்னார்)

முருங்கன் ஜும்மா பள்ளி வாசல் ஜமாத்தார்கள் கூட்டம் ஜனாப். எம். ஏ, சுல்தான் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் பள்ளிவாசல் பரிபாலனசபை நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் - ஜனாப். ஏ. பப்பான் குட்டி, உபதலைவர் - ஜனாப். என். நூர்தீன், செயலாளர் ஜனாப். எஸ். பதூர்தீன், பொருளாளர் - ஜனாப் என். றகுத்துல்லா.

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 1-ம் திகதி
(வெள்ளிக்கிழமை)
(17-10-1980)

மேடம்: நல்லதைச் செய்வீர்கள், நலன்பெருகும், தொழில் துறையில் முன்னேற்றமுண்டு. தாய்வழியால் தனவரவுக்கும் இடமுண்டு, சமூகத்தில் மதிப்பும் உயரும்.

இடபம்: உழைப்பினால் முன்னேற்றமுண்டு, சிலருக்குத் திடீர் திரவியலாபமும் கிடைக்கும், மனதில் இய எண்ணங்கள் தலைதூக்கும், எதிலும் புதுமையை விரும்புவீர்கள் கலகலப்பான தினம்,

மிதுனம்: தவறுகள் நடக்கலாம், நிலையும் தடுமாறும், நல்ல நண்பர்களாக நடித்து நள்ளிரவில் கழுத்தறுக்கும் நயவஞ்சகர்களை நம்பாதீர்கள்; கூர்மையான ஆயுதங்களுடன் பழகுபவர்கள் கவனஞ் செலுத்தவும்,

கடகம், மனதிற்கு மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் இடம் பெறும், களஸ்திரவழியால் கன்னியம் சேரும், காதலர்க்கு இன்று கனிவானநாள், பெரியோர்கள் ஆதரவும் தவறாது கிடைக்கும்.

சிங்கம்: ஏமாற்றம்தாக்கும், எதிலும்தயக்கநிலைதென்படும், செய்தொழில் மூலம் நஷ்டம் ஏற்படும், செலவினங்களைக் கட்டுப்படுத்தி நடக்கவும், நண்பர்களால் தொல்லையும் தோன்றும்.

கன்னி: கனிவான நினைவுகளின் மத்தியில் இன்று வாழ்க்கையை நடத்துவீர்கள். பெரியோர்கள் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும், பிதாவழியால் சுகமும் உண்டு.

துலாம்: பணம் தாராளமாகக் கிடைக்கும், கடமையாற்றும் இடத்தும் மேலதிகாரியின் நம்பிக்கையைப்பெறுவீர்கள், தூரதேசப் பிரயாணத்திற்கும் இடமுண்டு, உற்சாகமான தினம்.

விருச்சிகம்: பொருளாதார நிலை சீரடையும், மக்கள் புகழ் பரவும், சகோதரவழியால்

(5-ம் பக்கம் பார்க்க)

## தேவை

கந்தஷஷ்டி விழா மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் திருச்செந்தூர் புராணத்திற்கு பயன் சொல்லக்கூடிய மெய்யடியார்கள் வேண்டப்படுகிறார்கள். விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

**மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள்**
(ஆதீனகர்த்தா, பிரதம சிவாச்சாரியார்)
7085

## விசேஷ பயிற்சியாளர் (SPECIAL TRAINEES) தேவை

கண்ணாடித் தொழிற்சாலையில் உள்ள மின்சார போறணையில் (Electric Furnace) வேலை பழகுவதற்கு பயிற்சியாளர்கள் தேவை. G. C. E. (A/L) சித்தியடைந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**சேவி கிளாஸ் அன் மெட்டல் வேக்ஸ்,**
நீர்வேலி. 7090

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரான் — ஈராக் யுத்தம்:

# இருதரப்பிலும் பெருமளவில் துருப்புகள் மாண்டன!

## அபடானுக்கு அருகில் கடுமையானசண்டை

லண்டன், அக்டோபர் 16

**ஈரானும் - ஈராக்கும் கடும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சண்டையில் இருதரப்பினருக்கும் பெருமளவில் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.**

ஈராக் மீது நடத்திய விமானத்தாக்குதலில் ஆயிரத்திற்கு மதிகமான ஈராக் துருப்புக்களைக் கொன்றதாக ஈரான் அறிவித்துள்ளது.

இருபத்தொரு நாட்களாக நடந்துவரும் ஈரான் — ஈராக் யுத்தத்தில் 'இத் தாக்குதலில் தான் அதிக எண்ணிக்கையில் துருப்புக்கள் பலியானதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மிலானிற்கு அருகிலுள்ள ஈராக்கியத் தளங்களை ஈரான் துருப்புக்கள் விமானத்தில் தாழ்வாகப் பறந்து தாக்கியதாக தெஹ்ரான் வானொலி அறிவித்தது.

ஈரானின் எண்ணெய் சுத்திகரிப்பு நகரமான அபடானிற்கு அருகில் கடும் யுத்தம் நடக்கிறது.

ஈரானின் மிகப்பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு செல்லும் கடைசி நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 100மீட்டர் தூரம்வரை ஈராக் துருப்புக்கள் சென்றுவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அபடானில் ஏழு கிலோமீட்டர் தூரம்வரை ஈராக்கியத்துருப்புக்கள் தப்பிச்செல்லாதவாறு ஈரான் துருப்புக்கள் சுற்றிவளைத்துள்ளதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

அதேவேளையில் ஈரானிற்கு செல்லும் சகலவழிகளும், அபடான் வானொலிநிலையமும் தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதாக ஈராக் அறிவித்துள்ளது.

ஈரானின் பெரும்பாலான நகரங்களில் ஈராக்கியத் துருப்புக்கள் இருப்பதாகவும், அவைகள் ஈரானிற்கு பெரும் சேதத்தை ஏற்படுத்திவருவதாகவும் ஈராக் தெரிவித்துள்ளது.

(வெ)

யுத்தத்தில்ஈரான் நிலைமை:

# ஈரான் பிரதமர்

## ஐ. நா. வில் விளக்குவார்

தெஹ்ரான், அக். 16

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் ஈரான்—ஈராக் யுத்தம்பற்றி நடைபெறும் விவாதத்தில் தனது நாட்டின் நிலையை விளக்கிக் கூறுவதற்காக ஈரானியப் பிரதமமந்திரி ஜனுப் முகம்மதலி ரஜாஜ் இன்று நியூயோர்க்கிற்கு விஜயம்செய்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இவரின் இவ்விஜயத்தின் போது அமெரிக்க பணயக்கைதிகள் விவகாரம் பற்றியும் அமெரிக்க அதிகாரிகள் இவருடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்களென்றும் கூறப்படுகிறது.

ஈரானிய முன்னாள் மன்னர் காலஞ்சென்ற ஷாவின் ஆட்சிக்குப் பின்னர் ஈரானின் முக்கிய தலைவர் ஒருவர் அமெரிக்காவிற்கு விஜயம்செய்வது இதுவே முதல்தடவையாகும்.

(வெ)

"போலந்து வேலை நிறுத்தம்:

# பொருளாதாரக் கொள்கை தவறுகளே காரணம்"

வார்ஸா, அக். 16

"பொருளாதாரக்கொள்கையிலும் சமுதாய வாழ்விலும் இடம்பெற்ற பெரும் தவறுகளே, வேலைநிறுத்தத்துக்குப் பெரும் காரணமாயிருந்தன. ஜூலை மாதத்தில் போலந்தில் தொடங்கிய இந்த வேலைநிறுத்தப்போராட்டம் இன்னமும் தணியவில்லை. தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியின் விளைவுதான் இந்த வேலைநிறுத்தம்." என்று போலந்து ஐக்கிய தொழிலாளர் கட்சியின் மத்தியக் கமிட்டியின் முதல் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. ஸ்டானிஸ்லாவ் தானியா இங்கு டெலிவிஷனில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது, "இன்றுள்ளதைப் போன்ற கஷ்டங்களும் சிக்கலான பிரச்னைகளும் மக்கள் போலந்துக்கும், கட்சிக்கும் ஏற்படும் என்று நான் ஒரு போதும் கருதியதில்லை. இன்று வேலைநிறுத்தக்காரர்களின் எதிர்ப்பு, தொழிலாள வர்க்க நடவடிக்கைகளின் கட்டுக்கோப்புக்குள் அடங்கியதுதான் இது சோஷலிஸக் கோட்பாடுகளுக்கோ அல்லது இன்றுகட்சி வகிக்கும் பிரதான பாத்திரத்துக்கோ எதிரானதல்ல. அது நமது கட்சியின் தவறுகளுக்கும் எதிரானது. அதனால்தான் வேலைநிறுத்தக்காரர்களுடனான பேச்சுவார்த்தைகளும் சம்பாஷணைகளும் மிக அமைதியாகவும் நிதானமாகவும் நடைபெற்றன. இந்நெருக்கடியின் காரணங்களைக் கண்டுபிடித்து இனிமேலும் இத்தகைய அசம்பாவிதங்கள் நடைபெறுவண்ணம் அவற்றை அகற்றிவிட இடையறுத பிரயத்தனங்களை எடுப்போம். சோஷலிஸ விரோதிகளுக்கு இடம் கொடாதவகையில் நாட்டின் சகல பிரச்னைகள் அனைத்துக்கும் தீர்வுகாண விரும்புகிறோம்" என்றார்.

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளராகப் பணிபுரிந்த திரு. ரி. கே. குணநாயகம் அண்மையில் வட பிராந்திய முகாமையாளராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

மாவட்ட முகாமையாளர்களாக திருவாளர்கள் பி. கனகரட்ணமும், எஸ். சிவலிங்கமும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

# தொழிற்கட்சித்தலைவர்பதவி:

## பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர் ராஜினமா

லண்டன், அக். 16

பிரிட்டனின் முன்னாள் பிரதமமந்திரியும், பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவருமான திரு, ஜேம்ஸ் கலகன் தொழிற்கட்சித் தலைவர் பதவியிலிருந்து ராஜினமாச்செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனல் தொழிற்கட்சிக்குள் புதிய தலைவரை தெரிவு செய்வது தொடர்பாகக் குழப்பமும், அதிகாரப்போட்டியும் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இத்னல் இக்கட்சியின் தீவிர இடதுசாரி அங்கத்தவர்களுக்கும் வலதுசாரி அங்கத்தவர்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் வலுவடையலாமென்று அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் அடுத்த மாதம் 13ம் திகதி ஆரம்பமாக விருப்பதால் அதற்குமுன் தொழிற்கட்சியின் புதிய தலைவரை அதன் 268 பாராளுமன்றஉறுப்பினர்களும் தெரிவு செய்யவேண்டுமென்றுஜேம்ஸ் கலகன் கூறியிருக்கிறார். (வெ)

சோவியத்யூனியனில்

# ஆப்கானிஸ்தான் ஜனதிபதி

காபூல், அக். 16

ஆப்கானிஸ்தான் ஜனதிபதி ஜனப் கார்மால் சோவியத் யூனியனிற்கு விஜயம்செய்துள்ளார்.

சோவியத்யூனியனில் அவர் சோவியத் ஜனதிபதி திரு. பிரஷ்னேவுடனும் மற்றைய கிரெம்ளின் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்துவரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் ஜனதிபதியாகப் பதவியேற்றபின்னர் முதல்தடவையாக சோவியத் யூனியனிற்கு விஜயம்செய்துள்ள ஜனப் கார்மால், தமது பத்துமாதகால அரசாங்கத்திற்கு ஆப்கானிஸ்தானில் கடும் எதிர்ப்பு இருந்துவருவது குறித்து சோவியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவாரெனக் கூறப்படுகிறது.

சமார் 85,000 சோவியத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ளபோதிலும் ஜனப் கார்மாலின் அரசாங்கத்தனல் அங்குள்ள கிளர்ச்சி இயக்கங்களை முற்ருக ஒழிக்கமுடியாதுள்ளது என்றும் சர்வதேசஅரங்கிலும் இப்பொழுது ஆப்கானிஸ்தான் ஒரு புறக்கணிக்கப்பட்ட நாடாக இருந்துவருகிறது என்றும் கூறப்படுகிறது.

சோவியத்தலைவர்கள் ஜனப் கார்மாலின் பத்து மாதகால அரசாங்கத்திற்கு அங்கீகாரம் வழங்குவதுடன், தொடர்ந்தும் அதனை ஆதரிப்பதாக உறுதிவழங்குவார்களென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (வெ)

## வழிபாட்டு மண்டபம் திறக்கப்படும்

(புலோலி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி இந்து மாணவிகளின் வழிபாட்டிற்கு உரிய மண்டபமின்றி இருந்து வந்த குறைபாடு நீக்கப்படுவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப் பெண்கள் கல்லூரியில் 80 வீதத்திற்கு மதிகமான இந்து மாணவிகள் கல்விகற்று வருகின்றபோதிலும் இதுவரை காலமும்அவர்கள் பிரார்த்தனை செய்வதற்கான உரிய வழிபாட்டு மண்டபம் இல்லாமல் இருந்தது. சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் இந்து மாணவிகளுக்கான வழிபாட்டு மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டபோதிலும் அவ் வழிபாட்டு மண்டபம் உரிய முறையில் பயன் படுத்தப்படாமலேயே இருந்து வந்தது.

இதனையடுத்து பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து இவ்வழிபாட்டு மண்டபம் உரிய முறையில் திறந்து வைக்கப்பட்டு இவ்வழிபாட்டு மண்டபத்தில் வெண்கலத்தினல் உருவாக்கப்பட்ட "நடராஜர் சிலை" பிரதிஷ்டை செய்யப்பட்டு வைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்டுள்ளது.

(அ)

# சர்வதேசரீதியில்

## மது ஒழிப்புத்திட்டம்

### சுவீடன் பிரதிநிதி தகவல்

(மட்டுவில்)

'இளம் வயதினர் குடிப்பழக்கத்திற்கு ஆளாகாதவண்ணம் தடுக்க இளஞர் பொழுதுபோக்குச் சங்கங்கள் போன்ற ஏனைய சங்கங்கள், கழகங்கள், மன்றங்கள், முன்வரவேண்டும். இதற்குக் கலந்துரையாடல்கள், படக்காட்சிகள், அறிஞர்களின் நூல்களிலிருந்து மதுவிலக்குத் தகவல்கள் போன்ற சாதனங்களைக் கொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பரப்பவேண்டும்.'

இவ்வாறு சுவீடன் தேசத்து நல் ஒழுக்க வாலிபர் இயக்கப் பிரதிநிதி திரு. கென்த் றூன்வால்ட், கைதடி நுணுவிலில் நடைபெற்ற கருத்தரங்கில் கூறினர்.

கைதடி நுணுவில் ஸ்ரீ குமர குருபரன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் 12-ம் திகதி பிற்பகல் அறவழிப் போராட்டக்குழுவும், சர்வதேச நல் ஒழுக்க வாலிபர் இயக்க வடபிரதேசக்கிளையும் இணைந்து இக்கருத்தரங்கை நடத்தியது.

அறவழிப் போராட்டக்குழு பிரதிநிதிகள், சர்வதேச நல் ஒழுக்க வாலிபர் இயக்க வடபிரதேசக் கிளையின் பிரதிநிதிகள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், சர்வதேச நல் ஒழுக்க வாலிபர் இயக்க சுவீடன் தேசப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். திரு. கென்த் றூன்வால்ட் தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது:

'மது ஒழிப்பு, போதைவஸ்து ஒழிப்பு, சகோதரத்துவம், சமாதானம் வளர்த்தல் போன்ற அம்சங்களில் எமது இயக்கம் தீவிரமாக சர்வதேச ரீதியில் ஈடுபட்டுவருகிறது. அகில உலக ரீதியாக இயங்கிவரும் இந்த இயக்கம் இலங்கையில் கடந்த ஏழு ஆண்டுகளாக இயங்கி, நல்ல சேவையும், தொண்டும் செய்துவருகிறது. 1982-ம் ஆண்டுவரை எமது இந்த இயக்கம் இலங்கையில் தனது சேவையைத் தொடரும்.

'சீதன ஒழிப்பு, சாதிஒழிப்பு, உயிர்ப்பலி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு போன்ற சமுதாயத்தின் நலனுக்காக உழைத்துவரும் அறவழிப் போராட்டக்குழுவின் அம்சங்களுடன் இணைந்து எமது இயக்கமும்இயங்கத்தீர்மானித்துள்ளது.

சமுதாயத்தைக் காப்பாற்றவும், சமத்துவம், சகோதரத்துவம் வளரவும் உழைக்கவேண்டும்' என்றும் சுவீடன் பிரதிநிதி திரு. ஈவ்வும் கூறினர்.

# விவசாயிகள் சங்க பேரணி:

## அரசு தடை விதித்ததா?

### தமிழக முதல்வர் மறுப்பு

சென்னை, அக். 16

திருச்சிராப்பள்ளியில் தமிழ் நாடு விவசாயிகள் சங்கம் நடத்தவிருந்த பேரணியைத் தமிழ்நாடு அரசு தடுத்ததாக எழுந்த குற்றச்சாட்டை முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மறுத்துள்ளார்.

தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு நிலம் வழங்கப்படுவதை விவசாயிகள் சங்கத்தவர் எதிர்ப்பதால் உண்மையான விவசாயிகள் அவரை ஒரு பெரிய நிலச்சுவாந்தாரென்றும், தாழ்த்தப்பட்டவருக்கு எதிரானவரென்றும் கருதியதால் பேரணியில் கலந்துகொள்ளவில்லை என்றும் தமிழ்நாடு அரசு பேரணியைத் தடுக்கவில்லையென்றும் முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தெளிவுபடுத்தினர்.

(வெ)

## கிராம அபிவிருத்தி

(மன்னர்)

ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் மன்னர் மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமமான முள்ளிக்குளம் கிராமம் விரைவில் அபிவிருத்தி செய்யப்பட விருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

மாதர் யாவரும் ஜெகன் மாதாவின் அம்சங்களேயாவர். அவர்களைத் தாய் எனவே கண்டு கருதவேண்டும்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## நன்மைதரும் ஆராய்ச்சி

'பொதுமக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய விதத்திலேயே எல்லாவித ஆய்வுகளும், கருத்தரங்குகளும் நடைபெறவேண்டும்.'

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில்மத்தியூ கொழும்பில் 'ஆராய்ச்சி அபிவிருத்தித்துறையில் கூட்டுறவு நடவடிக்கைகள்' என்ற தலைப்பிலான கருத்தரங்கை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு சரியாகத் தெரிவித்திருக்கிறார்.

இருபத்தெட்டு நாடுகளைச் சேர்ந்த அறுபது சிரேஷ்ட விஞ்ஞானிகளும் தொழில் நுட்பவியலாளர்களும், பொறியியலாளர்களும் கலந்துகொண்ட இக் கருத்தரங்கில் அமைச்சர் சிறில் மத்தியூ இடத்துக்குப் பொருத்தமாக, பொருத்தமான விஷயத்தைத் தெரிவித்திருப்பதைப் பாராட்டவேண்டும்.

கைத்தொழில் வளர்ச்சிக்கும் விவசாய அபிவிருத்திக்கும் ஆராய்ச்சி அவசியம். அபிவிருத்தியடைந்த நாடுகளில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள், அபிவிருத்தி குறைந்த இலங்கையைப் போன்ற நாடுகளுக்குப் பெரிதும் உதவியளிக்கின்றன என்பது உண்மையே.

ஆனால் இந்த உதவிகள் அந்த நாடுகளிலிருந்துமூலப் பொருள்களையும் மற்றும் பொருள்களையும் இறக்குமதி செய்வதற்கும் தொழில் நுட்ப நிபுணர்களை எமது செலவில் இங்கு தருவிப்பதற்குமே பெரும்பாலும் வழிவகுக்கின்றன.

எமது நாட்டில்மூலவளத்துக்கும் மூளைப் பலத்துக்கும் குறைவில்லை. ஆனால் இவற்றைச் சரியாக ஆராய்ந்து நெறிப்படுத்தி அதற்கேற்றஊக்கமளித்துப் பயன்படுத்தப்படவில்லை.

இதனால் மூலப்பொருள்கள் பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி பின்னர் நமது நாட்டுக்கே பல்வேறு உற்பத்திப் பொருள்களாக இறக்குமதியாகின்றன.

இங்குள்ளவிஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு நல்ல வாய்ப்பும் வசதியும் பெறுகின்றனர். 'மூளை வளம்' வெளியேறாமல் தடுப்பது பற்றியே நாம் ஆராய்ச்சி செய்யவேண்டிய நிலையிலிருக்கிறோம்.

நமது நாட்டிலுள்ள மூலப் பொருள்களைப் பயன்படுத்தி பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அரசியல், பிரதேச வேறுபாடு முதலியசிந்தனைகளே இன்று வரை இடையூறாக இருந்து வருகிறது. ஒரு மூலப் பொருள் நிறையக்கிடைக்கும் இடத்தில்தான் அதைப் பயன்படுத்தி உற்பத்திசெய்யும் தொழிற்சாலை நிறுவப்படவேண்டும். இதுவே பொருத்தமும் முறையுமாகும்.

ஆனால் நமது நாட்டில் அரசியல் அடிப்படையிலும் தொகுதி, பிரதேசம் என்ற சிந்தனையிலுமே இதுவரை அநேகமான தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

வடக்கிலும், கிழக்கிலும் சிமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை, கடதாசி ஆலை ஆகிய மூன்று பெரிய தொழிற்சாலைகள் நாடு விடுதலையடைந்த காலத்தில் அமைக்கப்பட்டன. கடந்த கால்நூற்றாண்டுக்கு மேலாக வேறு பெரிய தொழிற்சாலைகள் எதுவுமே இப்பகுதிகளில் நிறுவப்படவில்லை. இப்பகுதிகளில் பெரிய தொழிற்சாலைகள் நிறுவக்கூடிய அளவு மூலப்பொருள்கள் கிடையாதா; உழைப்புச் சக்தியும் இல்லையா?

அமைச்சர் சிறில்மத்தியூ தெரிவித்திருப்பது போல் இனியாவது பொதுமக்களின் நலன்கருதி ஆய்வுகள் நடைபெற்றால் நிச்சயம் நாட்டில் தொழில் வளம் பெருகும்; நமது நாட்டில் உற்பத்தியும் பெருகும். வேலையற்றோர் பிரச்சினையும் தீரும்.

# வவனியாமாவட்டமும் அதன் அபிவிருத்திக்கான யோசனைகளும்

எமது நாட்டின் மிகவும் பின்தங்கிய மாவட்டமான வவனியா 847 சதுர மைலைக் கொண்டுள்ளது. 1971-ம் ஆண்டு குடிசன மதிப்புப் புள்ளி விபரப்படி இதன் சனத்தொகை 71,541 ஆகும். 1977-ம் ஆண்டு ஏற்பட்ட அமளியின் பின் 23,000 பேர் மலையகத்திலிருந்து இங்குவந்து குடியேறியுள்ளதாகத் தெரிய வருகிறது. தற்போதைய சனத்தொகை 95,000 பேர் ஆகும். முழு இலங்கையின் 314% நிலப்பரப்பைக் கொண்ட இம்மாவட்டத்தில் எல்லாமாக 13,500 குடும்பங்கள் வதிகின்றன. 95% மானோர் விவசாயத் தொழிலை நம்பி வாழ்கின்றனர்.

2,74,653 ஏக்கர் நிலத்தில் நெல், மரக்கறி, மிளகாய், வெங்காயம் போன்ற பயிர்கள் செய்கைபண்ணப்படுகின்றன. காட்டுநிலமாக 2,56,936 ஏக்கர் நிலமும், விவசாயம் செய்யப்படாத 15,290 ஏக்கர் நிலமும் இப்பகுதியில் உண்டு. 2,12,839 ஏக்கர் நிலத்தில் நெல் வேளாண்மை மட்டும் செய்யப்படுகின்றது. நெல் வேளாண்மை நிலத்திற்கு நீர் வழங்க 593 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும், 19 பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும் அமைந்துள்ளன. இத் திட்டங்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவைகள் காலத்திற்குக் காலம் திருத்தப்படுவதில்லை. இதனால் இந்நீர்த்தேக்கங்களில் மண்நிரவி அவை கொள்ளும் நீரின் அளவு கணிசமாகக் குறைகிறது. அத்துடன் வெள்ளப்பெருக்கினால் உடைப்பெடுத்து விவசாயிகளை நட்டத்துக்குள்ளாக்கிய குளங்கள் தொடர்ந்தும் அழிவுற்ற நிலைமையிலேயே மிஞ்சி நிற்பது விசனத்துக்குரியதாகும்.

இவைகளைப் பராமரிப்பதற்கு மட்டுமே 25 தொடக்கம் 30 லட்சம் ரூபாய் வரையில் தேவைப்படுகிறது. ஆனால் இம்மாவட்டத்திற்கு வருடமொன்றுக்கு அரசினால் வழங்கப்படும் தொகை 25 லட்சம் ரூபா மட்டுமே.

### 10 ஆயிரத்திற்கு மேற்பட்டோருக்கு வேலையில்லை

இம்மாவட்டத்தில் காணிகளற்ற 6,159 குடும்பங்கள் இருக்கின்றன. இதில் 3500 குடும்பங்கள் 77-ம் ஆண்டு மலையகத்திலிருந்து அகதிகளாக இங்கு வந்து குடியேறியவைகளாகும். 2159 குடும்பங்கள் சொந்தக் காணியற்ற நிலையில் கமம் செய்பவர்களாவர். இன்னும் இத்தொகுதியில் 10,000-க்கு மேற்பட்டோர் வேலையற்றவர்களாக இருக்கின்றார்கள். இவர்களும் அகதிக் குடும்பங்களும் நாட் கூலியை நம்பியே உயிர் வாழும் அவல நிலையில் உள்ளவர்களாவர்.

### கருத்தரங்கக் கருத்துக்கள்
### தொகுப்பு: பி. மாணிக்கவாசகம்

இவர்களுக்கு உரியமுறையில் அரசினால் காணிகள் வழங்கப்படவில்லை. மாதிரிக் கிராமங்கள் என்னும் பெயரில் நாட்டின் ஏனைய மாவட்டங்களில் குடியேற்றத்திட்டங்கள் வெகு கோலகாலமாகச் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. ஆனால் வவனியா மாவட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கையின் எந்தவொரு கட்டத்திலும் இதுபற்றிச் சிந்திக்கப்படவில்லை என்பது கவலையுடன் சுட்டிக்காட்டப்படவேண்டியதொன்றாகும்.

மேட்டுக்காணிகளில் அமைக்கப்பட்டுள்ள கிணறுகளில் கோடைகாலத்தில் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத நிலைஏற்படுகிறது. நீர்வளத்தை அறியும் திறன்மிக்க கருவிகளும் உத்தியோகத்தர்களும் அரச திணைக்களத்தில் இருக்கும் நிலையிலும், கிணறுகளை நீர்வளம் மிகுந்த இடங்களில் அமைப்பதற்கு இப்பகுதி மக்களுக்கு ஆலோசனைகளோ உதவியோ, வழிநடத்தலோ கிடைப்பதில்லை.

இம்மாவட்டத்தில் 97 தமிழ் பாடசாலைகளும், 21 சிங்களப் பாடசாலைகளும், 11 முஸ்லிம் பாடசாலைகளுமாக மொத்தம் 129 பாடசாலைகள் உள்ளன. இவற்றுள் மொத்தமாக 310 ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகிறது. 51 பாடசாலைகள் 5 வகுப்புகளை மட்டும் உடையதாகவும், படிப்பிப்பதற்கு ஒரே ஒரு ஆசிரியரைக்கொண்டதாகவும் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. பாடசாலைகளில் விடுதி வசதி இல்லாததும் வெளிமாவட்டத்தினரை சில வேளைகளில் மணம்முடித்த ஒரு கணவனை அல்லது மனைவியைத் தனியாக-இங்கு கிராமப்புற ஆரம்பப் பாடசாலைகளில் நியமனம் செய்வதாலும் இக்குறை மிகுதியாக நிலவுவதற்கு காலாக அமைந்துள்ளது.

பாடசாலைகளின் தரம்உயர்த்தப்பட்டு ஆய்வுகூடம், நூல் நிலையங்கள் போன்றவைகள் அமைக்கப்படவேண்டும்.

### மருத்துவமனையும் குறைபாடுகளும்

இம்மாவட்டத்திற்குப் (5ம் பக்கம் பார்க்க)

### மக்கள் கருத்து

## நெல்லியடி மத்திய சந்தையில்...

வடமராட்சிப்பகுதி, வலிகாமம் பகுதி விவசாயிகள் உற்பத்தி செய்யும் மிளகாய், வெங்காயம் மற்றும் மரக்கறி முதலான பொருட்களுக்கும் ஏனைய பொருட்களுக்கும் சிறந்த சந்தையாக நெல்லியடி மத்திய சந்தை விளங்குகின்றது.

அதே வேளையில் சந்தைக்குப் பொருட்களை விற்பனை செய்யவரும் விவசாயிகளுக்குத் தொல்லை கூடிய சந்தையாகவும் நெல்லியடி மத்திய சந்தை விளங்குகின்றது என்றால் மிகையாகாது.

விற்பனைக்குக்கொண்டு வரும் பொருட்களை விரும்பியவர்களுக்கு கொடுக்க முடியாமல் கூடுதல் விலைகேட்பவர்களுக்கு கொடுக்க முடியாமல் விவசாயிகளின் விற்பனைச் சுதந்திரத்தை இம்மத்திய சந்தையில் பொருட்களைக் கொள்வனவு செய்யும் சில வர்த்தகர்கள் பறித்து விடுகின்றார்கள். விவசாயிகளின் பொருட்களை ஒரு வீதியில் வைத்துப் பறித்துக்கொண்டு ஓடுவதனையும் நிறை குறைவு எனக்கூறினால் பொருளை திருப்பி அள்ளு என்று வர்த்தகர்கள் அட்டகாசம் புரிவதனையும் இம்மத்திய சந்தைக்கு வருவோர் நன்கறிவார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்த சந்தையாக விளங்கும் நெல்லியடியில் இவ்வாறு விவசாயிகளுக்குத் தொல்லை கொடுக்கும் செயல்களை ஒழித்துக் கட்டவேண்டும்.

இப்புனித காரியத்தில் காவல் துறையினரின் பங்கு முக்கியமானதாகும். அத்துடன் நெல்லியடி பட்டின சபையும் இதில் [illegible] கவனமெடுக்க வேண்டும்.

சி. சுப்பையா
நெல்லியடி

# நாடும் நடப்பும்

வட்டுக்கோட்டை சங்கரத்தையிலிருந்து க. பொ. த. (உயர்தரம்) படிக்கும் க. சிதம்பரநாதன் என்னும் மாணவர் ஐந்து ரூபாயுடன் பின்வரும் கடிதத்தையும் அனுப்பி வைத்திருக்கிறார்.

''அன்புடையீர்!

'ஈழநாடு' பத்திரிகையில் சில தினங்களுக்கு முன்பு மூன்று குழந்தைகளின் செய்திகளைப் பார்வையிட்டேன். ஊர்சுற்றிப் பகுதியையும் படித்தேன். மூன்று ஆண் குழந்தைகளின் நிவாரணம் பற்றிய செய்தியை ஓர் உருக்கமான வேண்டுகோளாக மாற்றி நல்லமுறையில் நன்மையான பாதையில் தங்களது எழுத்தாற்றல் மூலமாக வெளிப்படுத்தியதை 'ஊர்சுற்றி'ப் பகுதியில் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். எனக்கு மிகவும் இரக்கம் ஏற்பட்டது. ஆனால் பொருளாதார வாறி குறுக்கிட்டது. நான் ஒரு க. பொ. த. (உயர்தரம்) படிப்பதால் எனது பொருளாதார வசதிக்கு ஏற்பவும் 'சிறுதுளி பெருவெள்ளம்' என்ற முதுமொழிக்கு அமையவும் சிறுதொகையினை (ரூ.5/-) இத்துடன் அனுப்புகிறேன். இச் சிறுதொகையினை உரிய நேரத்தில் உரிய இடத்தில் சேர்க்கும் வண்ணம் பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

நன்றி

இங்ஙனம்
அன்பன்
க. சிதம்பரநாதன்.

0 0 0

கடந்த இரண்டு தினங்களாக யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து பெருமழைபொழிகின்றது.

எங்கும் பசுமைக் காட்சியையே காண முடிகிறது.

யாழ். நகரில் நெடுஞ்சாலைகள் பலவும் செப்பனிடப்பட்டுள்ளதால் பழைய கஷ்டங்கள் சற்றுக்குறைந்துள்ளது. ஆனால் குறுக்கு வீதிகள் ஒழுங்கைகள் இன்னும் பழமையைப் பாதுகாத்து வருகின்றன சில நிமிடநேரம் மழை பெய்தாலே வெள்ளம் நிற்கும் ஒழுங்கைகளைப் பற்றிச்சொல்ல வேண்டாம். இந்த ஒழுங்கைகளில் யாழ். மாநகரசபை படகுச் சேவையை ஆரம்பித்தால் நிச்சயம் நல்ல இலாபம் கிடைக்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத்தொடர்ச்சி)

கும்; சிலருக்கு வேலை வாய்ப்பும் தேடிக்கொடுத்த பெருமையையும் சிலர் தட்டிக்கொள்ளலாம்!

மற்றும் பல வீதிகளில் குண்டும், குழிகளும்தான்! வாகனங்களும் வழக்கம்போல் பாதசாரிகள் மீது சேற்றைவாரி அபிஷேகம் செய்யத் தவறவில்லை.

மின்வெட்டு ரத்துச்செய்யப்பட்டபின்னரும் கூட யாழ்ப்பாணத்தில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதுண்டு. மழை விழுந்தால் சொல்ல வேண்டுமா? எந்தநேரம்ஒளிமறைத்து இருள் சூழும் என்பதைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. மின்வெட்டுக்கு முழுப் பொறுப்பையும் மாநகரசபை மீது சுமத்தமுடியாது. மின்சாரசபையும் இந்தப் 'பழி'யை ஏற்கவேண்டும்!

- ஊர்சுற்றி

## செழுங்கமலச் செல்வீ!

தெளிந்தோரிற் தோற்றும் செழுங்கமலத்
தேன்செல்வீ
தலிந்தோர் தலன்நாடும் தங்காய் — மொழிதேர்
வளங்கூர்ந்த வண்டமிழால் வாழ்த்தி
உனைப்போற்ற
உளங் கூர்ந்த கல்விதா ஓர்ந்து

நவிலவொணு நாமகளே; நான்மறையின் தாயே!
புவிபுனையும் பொற்புடைய பூவாய்—
கவிபுனையும்
நல்வித்தை சொல்லடிமை நாற்பொருளும்
கற்பனையும்
கல்விக் கருத்தொன்றத் தா.

வேறு

தாயேசரணம் தாயென வந்தேன்
சேயெனத் தாங்கி யிரும்பொருள் தருவாய்
நீயென் ஒளியாம் பலமாம் குணமாம்
வாயாற் பரவவும் வாணி எனிதோ.

— குறமகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவனியா மாவட்டமும்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவானதாக வவனியா நகரில் ஏழு விடுதிகளை (வார்ட்) கொண்ட ஆதார மருத்துவமனை இயங்கிவருகிறது. இங்கு எக்ஸ்-ரே பிரிவு (அமைக்கப்பட்டுள்ளது எனினும் சீராக இயங்குவதில்லை) சத்திர சிகிச்சைப்பிரிவு, நவீன வசதிகள் நிறைந்த பிரசவ விடுதி முதலியன அமைக்கப்படவேண்டும்.

மாவட்ட வைத்தியப் பகுதியின்கீழ் 4 பொது சுகாதார உத்தியோகத்தர் மட்டுமே பணிபுரிகின்றனர். ஆனால் இங்கு 12 உத்திதோகத்தர் (எல்லாமாக) மாவட்டத்தின் விஸ்தீரண அளவில் தேவைப்படுகின்றனர்.

கிராமங்களின் எண்ணிக்கை மக்கள் செறிவின் அடிப்படையில் 30 மருத்துவ மாதுகள் பணியில் ஈடுபடவேண்டும். ஆனால் இங்கு பணிபுரிவதோ 8 பேர் மட்டுமே.

கிராமங்களில் ஆங்காங்கு மருந்துவசாலைக் கட்டிடங்கள் அமைந்துள்ளன. நடமாடும் வைத்திய சேவையின் மூலம் எப்போதாவது இவைகளில் மக்கள் மருந்தைப் பெறுகிறார்கள். இவைகள் நிரந்தர மருந்துச்சாலைகளாக ஆக்கப்படுவதுடன் நடமாடும் வைத்திய சேவை இல்லாத உட்புறக் கிராமங்களுக்குச் சீரான சேவை விஸ்தரிக்கப்படுதல் அவசியம்.

## பெண்கள் ஓய்வுநேரத்தைக் கழிக்க

கிராமப் பெண்களின் ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாகக் கழிப்பதற்குக் கிராம மட்டத்தில் சிறுகைத்தொழில்கள் ஆரம்பிப்பதற்கு ஊக்கமளித்தல் நன்று. தையல், நெசவு நிலையங்கள் 4-5 கிராமங்களுக்கும் பொதுவாக அமைக்கப்படுதல் வேண்டும். கோழி, தேனீ போன்றவைகளை வளர்ப்பதற்கும் பெண்களுக்கு ஊக்குவிப்பும் கடன் வசதியும் ஏற்படுத்துதல் அவசியம்.

3-4 கிராமங்களின் கூட்டுறவோடு ஆடு, மாடு, பன்றி வளர்ப்பதற்கான பண்ணைகளை உருவாக்கி, கிராமத்தவரிடையே நிலவும் வேலை இல்லாப் பிரச்சினையைக் குறைக்க வழி செய்யலாம்.

கிராமங்களில் போக்குவரத்துக்கான பாதைகள் சீராக இல்லை. இவைகளைக் கிராமச் சங்கங்கள், கிராம சபைகளின் பொறுப்பிலும், சாலைத் தொடர்பு இணைப்புகளை நெடுஞ்சாலைப் பகுதியினரின் பொறுப்பிலும் விடலாம்.

## இளைஞர் குடியேற்றத்திட்டங்கள்

இளைஞர் குடியேற்றத் திட்டங்கள், தகுந்த சூழல் பாதுகாப்புடனும் கிராம வடிவத்திலும் அமைக்கப்படல் வேண்டும். இவைகளில் உள்மாவட்டத்தினருக்கு மட்டுமே இடமளித்தல் அவசியம்.

விவசாய, தொழில் நுட்பப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு இளைஞர்களைச் சிறந்த முறையில் பயிற்றுவிக்க வேண்டும்.

கல்வியில் ஊக்கமும் முன்னேற்றமும் கொண்டுள்ள கிராம மட்ட மாணவர்களுக்குத் தேவையான உயர்கல்வி வசதியளிப்பதற்காக, உயர் கல்வி நிலையம் இம்மாவட்டத்திலேயே அமைதல் அவசியம்.

கிராமப்புறங்களுக்கு மின் வசதி விஸ்தரிக்கப்படல் வேண்டும். இதன் மூலம் நீரிறைப்பு இலகுவாகும். விவசாயத்தில் உற்பத்தி பெருகவும் வாய்ப்புண்டு.

இவைகள் வவனியாவில் இலங்கை மன்றக் கல்லூரி நடாத்திய கிராம அபிவிருத்தியில் சமுதாயத்தின் பங்கு என்னும் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட விபரங்கள், குறைகள், தேவைகள், அவற்றுக்கான சிபார்சுகள் ஆலோசனைகள் என்பவற்றில் சிலவாகும்.

நகரசபை மண்டபத்தில் இம்மாதம் 8ம் திகதி தொடக்கம் 12ம் திகதி வரை நடைபெற்ற இவ் வெளிக்களக் கருத்தரங்கில் 56 பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். இம் மாவட்டத்தின் பல பாகங்களிலுமிருந்து சமுகமளித்திருந்த இவர்கள் காந்தீயம், இளைஞர் மன்றங்கள், மகளிர் மன்றங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றின் முக்கியஸ்தர்களாவர்.

தத்தமது கிராமத்தினதும், ஒட்டு மொத்தமாக வவனியா மாவட்டத்தின் முன்னேற்றத்திற்காகவும் அக்கறைகொண்டு ஸ்தாபன ரீதியில் உழைக்கும் இவர்களுக்காக இக்கருத்தரங்கை மிகவும் பயனுள்ளதாகவும் வெற்றிகரமாகவும் நடாத்திமுடித்த சிறப்பு விரிவுரையாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரனுக்கும் கல்வி உத்தியோகத்தர் திரு. ஒ. ஆறுமுகத்திற்கும் சேரும்.

சர்வதேச அரங்கிலும், அரசியல், கல்வி வட்டாரங்களிலும் 'அபிவிருத்தி' என்ற சொல் அர்த்த புஷ்டியுடன் கையாளப்பட்டு வருகின்றது. பேச்சு, எழுத்தளவில் மட்டுமல்லாமல் செயல்முறைகளிலும் குறிக்கத்தக்க அளவில் சமுதாயங்கள், கிராமங்களிடையே வளர்முக நாடுகள் அனைத்திலும் இப்பதம் காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்திவருகிறது. கிராமங்களையே உயிர்நாடியாகக் கொண்டு வாழ்கின்ற இலங்கையைப் போன்ற நாடுகளில் அபிவிருத்திமுறை கிராமங்களையே முதன்மையாக வைத்துச் சிந்திக்கப்படுகின்றது.

இயந்திர மயமாகி, கைத்தொழில்கள் பெருகியுள்ள நவீனமயமான நகரத்தன்மைக்கும், உன்னதமான சிறப்புகளையும் பெறுமானங்களையும் உடைய கிராமியக் கோட்பாடுகளுக்கும் இடையே உள்ள மிகப்பரந்தஇடைவெளி இதன் மூலம் குறைவடையும்.

## எம். பி. கோரிக்கை

இதன் அடிப்படையிலேயே வவனியா மாவட்டத்தின் அபிவிருத்தியை மையமாகக் கொண்டு 'கிராம அபிவிருத்தியில் சமுதாயத்தின் பங்கு' என்னும் கருத்தரங்கு அமைந்திருந்தது. 5நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற இக்கருத்தரங்கை ஆரம்பித்துவைத்து வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் உரையாற்றினர்.

"பொறுப்பும் செயல்திறனும் மிக்க கிராமப் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்வது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தீர்க்கமான ஆய்வின்பின் பயன்மிக்க, பரந்தஅளவிலான அரசாங்கத்தினதும், நிறுவனங்களினதும் செயல்பாட்டுக்கான திட்டமொன்று சமர்ப்பிக்கப்படவேண்டும்" என அவர் கேட்டுக்கொண்டார்.

"கருத்தரங்கின் இறுதியில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை அரசாங்கத்தின் பார்வைக்கு அனுப்பிவைக்கப்படும். அதன் பிரதிகள் வவனியா மாவட்ட அமைச்சர் வவனியா எம்.பி. நகரசபைத்தலைவர் ஆகியோருக்கும் உரிய நடவடிக்கைகளுக்காக அனுப்பிவைக்கப்படும் என்று இலங்கை மன்றக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் உறுதியளித்தார்.

இக்கருத்தரங்கில் விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சின் பிரதி இயக்குநர் திரு. எஸ்.சிவானந்தன் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு. சி. பாலசுந்தரம் வவனியா திட்டமிடல் உத்தியோகத்தர் திரு. எஸ். சுவாமிநாதன் பேராசிரியர்கள் க. கைலாசபதி, பி. பாலசுந்தரம் விரிவிரையாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன், கல்வி உத்தியோகத்தர் திரு. ஒ.ஆறுமுகம் காந்தீயத்தைச் சேர்ந்த கலாநிதி எல். ராஜசுந்தரம் திரு. ஏ. எஸ். மூர்த்தி ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்கள்.

கொழும்பில் மட்டுமல்லாமல் மாவட்டங்களிலும் உயர் மட்டம் தொடக்கம் கீழ்மட்டம் வரையிலும் சகல துறைகளிலும் மனித மேம்பாட்டிற்காக மக்களிடையே ஒரு தேசிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் இலங்கை மன்றக் கல்லூரியின் பணி பாராட்டுக்குரியது.

கிராம அபிவிருத்தி தொடர்பாக வவனியாவில் நடைபெற்ற இக்கருத்தரங்கு செயல் வடிவத்திற்கான ஒரு விழிப்புணர்வையும் உந்து சக்தியையும் அளித்துள்ளது என்றால் மிகையாகாது. (அ)

---

"சிறிமா விவகாரம்:

# தனிக்கட்சி சர்வாதிகார ஆட்சிக்குவழிகோலக்கூடும்'

## தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலாளர் அறிக்கை

(கொழும்பு)

"திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமையை ரத்துச்செய்யும் சட்டம் அரசினுல் நடைமுறைப்படுத்தப்பட்டால் ஆபத்தான ஒரு நிலைமை உருவாக்கப்பட்டுவிடும். தனிக்கட்சி சர்வாதிகார ஆட்சிக்கு இதுவழிகோலக்கூடும். தமிழ்க்காங்கிரஸ் அதனை அனுமதிக்க முடியாது. மக்களின் சுதந்திரமும் ஜனநாயக உரிமைகளும் நிலைக்கவேண்டும்"

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமையை அரசு ரத்துச் செய்ய இருப்பது தொடர்பாக அகிலஇலங்கை தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. ஜி. பொன்னம்பலம் (குமார்) வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

"ஒரு தேர்தல் தொகுதியில் உள்ள மக்கள் தாங்கள் விரும்பும் ஒருவரைத் தங்கள் பிரதிநிதியாக தெரிவு செய்யும் உரிமையுடையவர்கள். விசாரணைக்குழு ஒன்று வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் அந்தஅந்த உரிமையை சட்டம் கொண்டுவந்து சுருக்குவதற்கு அரசாங்கம் விரும்பினால் அதற்கு சர்வஜனவாக்கெடுப்பு நடத்தவேண்டும்.

"உத்தேச சட்டம், ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைக்கு முரணுகவும் உள்ளது. தேர்தல் தொகுதிகளில் வாக்காளர் தமது பிரதிநிதிகளை தாமே தெரிவுசெய்ய வேண்டும். அந்த உரிமை மிகவும் உயர்வானது. அந்த உரிமையை எவராலும்மாற்றியமைக்கவோ குறைக்கவோ முடியாது. பூரண இறைமை என்பது பிரதிநிதிகளை தெரிவு செய்யும் வாக்காளர்களிடம் தங்கியுள்ளதே தவிர நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வகிக்கும் குழுவிடத்திலல்ல." (க)

---

யாழ்ப்பாண பல்கலைக்கழக

## புவியியல் பேராசிரியர்

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியற் சிரேஷ்டவிரிவுரையாளராகக் கடமையாற்றிய கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற் பேராசிரியராக நியமனம்பெற்றுள்ளார். 38 வயது நிரம்பிய இவர், மிக இளம் வயதில் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

வேலணை கிழக்கைச் சேர்ந்த இளைப்பாறிய தலைமையாசிரியர் பண்டிதர் பொன்னுத்துரை, இளைப்பாறிய தலைமையாசிரியை திருமதி பொன்னுத்துரை ஆகியோரின் மகனுன இவர், ஊர்காவற்றுறை செண். அந்தோனியார் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரின் பழைய மாணவராவார். 1965ல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியற்சிறப்புப் பட்டம்பெற்று, அவ்வாண்டிலிருந்து அங்கேயே புவியியற் துணைவிரிவுரையாளராகக் கடமையாற்றிஞர். 1969ல் உயர்கல்விபெற இங்கிலாந்து சென்ற இவர், அங்கு டர்காம் பல்கலைக்கழகத்தில் "வட இலங்கை மத்திய இடங்களின் படிமுறை வளர்ச்சி" எனும் தலைப்பில் நகரவளர்ச்சி, குடித்தொகை வளர்ச்சி என்பனவற்றிற்கு முக்கியத்துவமளித்து ஆய்வு மேற்கொண்டு 1972ல் கலாநிதிப்பட்டம் பெற்ருர். இதன்பின் பேராதனைப் பல்கலைக்கழகம் திரும்பி, அங்கு புவியியல் விரிவுரையாளராகக் கடமையாற்றிய இவர். 1978ல் சிரேஷ்ட விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். 1980 செப்டெம்பர் முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற் பேராசிரியராக நியமனம் பெற்றுள்ளார்.

பல ஆய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதிவரும் இவர் வட இலங்கை பற்றிய பொருளாதார, சமூக ஆய்வில் அதிக ஈடுபாடுகொண்டவராகும். பல்துறையார்வம் கொண்ட இவர் சமூகசேவைகளிலும், தமிழியல் கலைவளர்ச்சியிலும் அக்கறை கொண்டுழைப்பவராகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலேயே வயதிற் குறைந்தஇளப் பேராசிரியரான இவரது பணி இளம் ஆய்வாளர்களையும் இளைஞர்களையும் பெரிதும் ஊக்கப்படுத்துமென நம்பலாம்.

—மாணவன்

---

## "கடல் தொழிலாளர் முன்னேற்றம் மதுவினுல் தடைப்படுகிறது"

### விரிவாக்க சங்க அதிபர் கவலை

(புலோலி)

"கடற்றொழிலாளர்கள் அரசாங்கம் வழங்கும் கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தும் போதுதான் அரசாங்கம் அவர்களுக்கு மேலும் உதவிகளை வழங்கமுடியும். அரசாங்கத்தினுல் வழங்கும் கடன்களைக்கட்டத் தவறும் கடற்றொழிலாளர்கள் தமது வருங்காலச் சந்ததியினருக்குத் துரோகம் செய்தவர்களாவர்.

இவ்வாறு அல்வாய் மேற்கு சக்கோடை புனிதசவேரியார் விளையாட்டுக்கழகத்தின் பதினேராவது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அதிபர் திரு. ஏ. பிலிப் கூறினர். வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் திரு. எஸ். முத்துலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது.

"கடற்றொழிலாளர்களின் முன்னேற்றம் மது அருந்தும் பழக்கத்தாலும் அதிகபிள்ளைகளைப் பெற்றெடுப்பதனுலும் தடைபடுகின்றது" என்றுதிரு. பிலிப் சொன்னர். (அ)

---

## "இளமையிலேயே மாணவருக்கு கலைத்துறைப்பயிற்சி வேண்டும்"

### -வட. கல்விஅதிபதி

(உடுப்பிட்டி)

"கலைகள் மனித வாழ்வோடு ஒன்றிணைந்து இருக்கின்றன. ஒரு மனிதனைப் பூரணத்துவம் அடையச் செய்வது கலைகளே. மாணவர்கள் இளம் பிராயத்திலிருந்தே கலைத்துறையில் ஈடுபடுத்தப்பட வேண்டும், அப்பொழுதே அவர்களிடம் இயல்பாகவே கலை உணர்வும் கலைத்திறனும் அமையும்"

இவ்வாறு வடமாநிலக் கல்வி அதிபதி திரு. கே. சிவநாதன் அகில இலங்கைத் தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட இசை, நடன நாடக இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்வைபவம் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கல்வி அதிகாரி திரு.கே.நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

கல்வி அதிபதி திரு. கே. சிவநாதன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"அகில இலங்கைரீதியிலான இசை, நடன, நாடகப் போட்டிகள் யாழ்நகரில் நடைபெறுவது மிகவும் பொருத்தமானதும் மகிழ்சி அளிக்கக் கூடியதுமாகும். இதர மாகாணங்கள் பலவற்றிலிருந்தும் இங்கு பல மாணவர்கள் வந்திருக்கிறார்கள் இவர்கள் யாழ்ப்பாணத்தின்

(8-ம் பக்கம் பார்க்க)

---

## இன்றையபலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சுகத்திற்கும் இடமுண்டு, பத்திரிகையாளர்களின் வேதனம் உயர்த்தப்படலாம்.

தனுசு: அவசரம் வேண்டாம், ஆயுதபீடைக்கும் இடமுண்டு, நின்று நிதானித்துச் செயல்பட்டால் அமைதி உன் காலடியில் கிடைக்கும்.

மகரம்: குடும்பத்தில் சிறிய பூசல் தலைதூக்கி மறையும், மனதில் அமைதி குன்றும், விஷமிகளின் புனைந்துரைகளால் ஆத்திரம் அதிகரிக்கும், உதவிசெய்யப்போய் உபத்திரவத்தில் மாட்டிக்கொள்ளாதிர்கள்,

கும்பம்: பேச்சில் நிதானம் பெருமையைத் தேடித்தரும், வீட்டில் சுபகருமங்களும் இடம்பெறும், பிரிந்தவர் மீண்டும் வாழ்க்கையில் இணைவர், கல்வியால் சுகமும் உண்டு.

மீனம்: அவசரக் கோலம் சிக்கலைத் தோற்றுவிக்கும், மனதில்விரக்திதோன்றும், வீணை சிந்தனையால் சோர்வு நிலை தோன்றும், மௌனமும் தெய்வபக்தியும் நன்று.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

---

## பரிதாப மாணவர்கள்!

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறை தேர்தல் தொகுதியிலுள்ள போக்கறுப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் கட்டட வேலைகள் பூர்த்தியடையாததினுல் இது வரை காலமும் வகுப்புகள் மரநிழலிலேயே நடத்தப்பட்டு வந்தன. தற்போது பருவமழை ஆரம்பித்துள்ளதால், வகுப்புகளை மரநிழலின் கீழும் நடத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தாய்மொழித் தேர்ச்சியின்றி பூரண அறிவு வராது"

## கல்லூரி அதிபர் கூறுகிறுர்

(புலோலி)

'மாணவர்கள் மத்தியில் மொழித்திறன் குறைந்துவருவதற்குக் காரணம், அவர்கள் விஞ்ஞான, கணிதபாடங்களை மாத்திரம் கற்றுவிட்டால் போதும் என்று நினைப்பதனுலேயேயாகும். இதனை விடுத்து மொழித்திறனையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.'

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் நடைபெற்ற பாரதி விழாவிற்குத் தலைமைவகித்து உரையாற்றிய கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ. என்.எஸ். சாமுவேல் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

'மாணவர்கள் தாய்மொழியில் போதிய தேர்ச்சி பெறும் போதுதான் அவர்களுக்குப் பூரண அறிவு ஏற்படும். எனவே மொழித்திறனை வளர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவேண்டும்.

'பாரதியார் போன்ற தமிழ் அறிஞர்களுக்கு விழா எடுப்பதன் மூலம் மாணவர்களிடையே மொழிப்பற்றையும், மொழி உணர்வையும் ஏற்படுத்த முடியும். பாரதி பாடல்கள் எமது வாழ்வை மலரச்செய்கின்றன. தெய்வீகத்தன்மையும், நயமும் மிக்க அவரது பாடல்கள் மனித குலத்திற்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றன. தமிழோசை உலகெங்கும் பரவ வேண்டுமென்பதே பாரதியின் பேரவாவாக இருக்கிறது. அவருக்கு விழா எடுக்கும் நாம் பாரதியின் கனவை நனவாக்க வேண்டும்.'

ஆசிரியர்கள் திரு. கே. பால சுப்பிரமணியம், திரு. சிவா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினுர்கள். (அ)

# "கல்வி, செல்வம், வீரம் வாழ்வுக்கு அவசியம்"

(யாழ்ப்பாணம்)

'மணலும்' குறுணிக்கற்களும், சீமெந்தும் சேர்த்து உரிய அளவில் கலக்கப்பட்டே கற்கள் தயாரிக்கப்பட்டு வானளாவிய கட்டடங்கள் நிறுவப்படுகின்றன. தனியச் சீமெந்திஞலோ அல்லது குறுணியிஞலோ கற்கள் தயாரிக்க முடியாது. இதேபோன்று கல்வி, செல்வம், பராக்கிரமம் ஆகிய மூன்றும் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும். தேக நலன் சற்றும் இல்லாதான் கலாநிதிப்பட்டம் பெற்றும் உபயோகமாகமாட்டான். அதேபோல எத்துணைத் தேக பலம் இருந்தும் பொருளில்லாதவனை ஒருவரும் வேண்டார். ஆகவேதான் இம் மூன்றுதுறைகளிலும் முன்னேற முறையே சரஸ்வதி, இலக்குமி, துர்க்காதேவி ஆகிய பராசக்தியின் முகூர்த்தங்களைத் தமிழ்மக்கள் தொன்றுதொட்டே வழிபடுகின்றனர்.'

இவ்வாறு கலவெட்டித்திடல் நாகேசுவர வித்தியாலய மண்டபத்தில் நடந்த நவராத்திரி விழாவைக் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து உரையாற்றியபோது ஆசிரியமணி ஆர். ரீ. சுப்பிரமணியம் கூறினுர்.

இவ்விழாவுக்கு வித்தியாலய அதிபர் திரு. சி. வை. ஐயாத்துரை தலைமைவகித்தார் எத்துணைப் பொருளாதார நெருக்கடி வரினும் எமது சமய விழாக்களை நாம் தவறவிடக்கூடாது. சமய உணர்வற்ற வாழ்வு சுக்கானற்ற மரக்கலம் போன்று பலன்தராது' என்று தலைவர் தமது உரையில் கூறினுர்.

ஆசிரியர் க. வைரமுத்து, திரு. அ. வ. வனேசுவரன், செல்வி சந்திரா தம்பியையா, திரு. வே. மயில்வாகனம் உட்படப் பலர் உரையாற்றினுர்கள்.

மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (அ)

# "உலகில் முதலாவது பூர்வ இனம் திராவிடர்களே"

## வரலாற்றுய்வாளர் உரை

(மன்னுர்)

முதலாவது பூர்வ மனித இனம் திராவிட இனமே. முன்னேடி நாகரிகம் இந்துவெளியிலேயே உருவானது. இதனை இன்றைய ஆய்வாளர்களால் மறுக்க முடியாதிருக்கின்றது.

தமிழக 'பசுங்கதிர்' ஏட்டின் ஆசிரியரும், வரலாற்றியல் ஆய்வாளருமான ஜனுப் எம். கே' ஏ. மவ்லானு, மன்னுர் பொது நூலக முன்றலில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

மன்னுர் வாகசர் வட்டத்தின் சார்பில் நடந்த இக்கூட்டத்திற்கு கவிஞர் கலைவாதி கலீல் தலைமை வகித்தார்'

பூர்வகால மனித இன வரலாறு என்ற தலைப்பில் உரையாற்றிய ஜனுப் மவ்லானு மேலும் கூறியதாவது: இந்தியாவில் உள்ள சிந்துவெளியில் சேர் ஜோன் மாஷல், பிட்சித் என்ற இரு வரலாற்று ஆராய்ச்சியாளர்களால் மொஹஞ்சதாரோ, ஹரப்பா என்ற இரு மாபெரும் நகரங்களின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன், உலகப் பூர்வ மனிதர்கள் சுமேரியர்கள் தான் என்று சிட்டவட்டமாக நம்பப்பட்டு வந்தது. அந்த நம்பிக்கை இப்பொது முற்றுகத் தூக்கி எறியப்பட்டது. உலகமே வியக்கும் வண்ணம், இன்றைய நவநாகரிகங்கள் அனைத்தும் அந்த நகரங்களில் காணப்படுகின்றன. சுட்ட மண் செங்கற் கட்டிடங்கள், அகலமான வீதிகள், மாடி வீடுகள், பிரமாண்டமான பொதுக் குளியல் அறைகள், ஆடைகள், ஆபரணங்கள், அற்புதமான சிற்பங்கள், வெண்கலப் பொருட்கள் அனைத்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக இதுவரை நிலவிவந்த பூர்வ மனிதன் பற்றிய கோட்பாடுகள் யாவும் தகர்ந்துவிட்டன. அது இப்போது சிந்துநதிக்கரையோரத்தைச் சுற்றியே வட்டமிடும் ஒரு புதிய கோணத்தில் வரலாற்றுய்வாளர்களைத் திசை திருப்பிவிட்டுள்ளது.

உலகப் புகழ் பெற்ற வரலாற்றுய்வாளரான ஏ. கொந்தராத்தோ என்பவர் தான் எழுதிய "லெமூரியாக் கண்டத்தின் மர்மங்கள்" என்ற பதினுன்கு கட்டுரைகள் அடங்கிய தொகுப்பொன்றில் முழுக்க முழுக்க தமிழைப் பற்றியும் திராவிடத்தைப் பற்றியுமே எழுதியிருக்கிறுர். சமீபத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்களில் இருந்து உலகத் தொல்லினம் திராவிட இனமே என்பது உலக முதன் மொழி தமிழே என்பதும் புலனுகிறது. (க)

# விதை நெல் விநியோகம்

(பச்சிலைப்பள்ளி)

தற்போது ஆரம்பமாகி உள்ள பெரும்போக விதைப்பிற்கான விதைநெல் பளைப் பகுதி விவசாயிகளுக்கு பளை கமநலச் சேவை நிலையத்துக்கு ஊடாக விற்பனை செய்யப்படுகின்றது. விவசாயிகள் கமக்காரர் அடையாள அட்டையைக் காண்பித்து நெல்லினை விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

# சாரண பிரிவு அங்குரார்ப்பணம்

(மாவிட்டபுரம்)

"சாரண உயர் பயிற்சி நெறிகள் முதன்முதலாக தமிழிலும் இனிமேல் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது. இதன் மூலம் சாரணர் உயர் பயிற்சி பெற்றவர்ள் தமிழ்ப் பகுதிகள் தோறும் தோன்றி உலகளாவிய சர்ரணீய இயக்கத்தை நமது பகுதிகளிலும் வளர்க்க முடியும்".

இவ்வாறு எதிர்க்கட்சி முதல்வரும் காங்கேசன்துறை பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, மானிப்பாய் தொகுதிகளைக் கொண்ட புதியதோர் சாரண பிரிவை அங்குரார்ப்பணம் செய்து வைத்த வைபவத்தில் கலந்து அதற்கான அலுவலகத்தை திறந்து வைத்துப் பேசுகையில் கூறினுர்.


மாவை - கொல்லங்கலட்டி கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடந்த இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவா தலைமைவகித்தார்.

புதிய பிரிவை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசிய பிரதம சாரண ஆணையாளர் திரு. எச். இரத்தினசூரியா பேசுகையில் "யாழ். மாவட்டத்தில் முன்னர் ஒரே பிரிவாக இருந்த சாரணர் பிரிவு இன்று நான்காக பிரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இவ்வியக்கம் துரிதமாக வளர முடியும். ஏற்கனவே 12 ஆயிரமாக இருந்த சாரணர் தொகை கடந்த சில ஆண்டுகளில் 50 ஆயிரமாக அதிகரித்துள்ளது. விரைவில் ஒரு லட்சமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கிறேம். சாரணீய இயக்கத்தில் பிரதிபலனை எதிர்பாராது சேவைபான்மையுடன் [illegible] தொண்டர்களுக்கு முக்கிய இடம் அளிக்கப்படும்" என்று கூறினுர்.

# நைஜீரியா சென்றுள்ளார்

(அரியாலை)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிய திரு. சின்னையா சிவநேசன் நைஜீரியாவில் ஆசிரியராக நியமனம் பெற்றுச்சென்றுள்ளார். இவர் வட மாகாண அதிபர்களின் சங்கச் செயலாளராகக் கடமையாற்றினுர்.



(ஊரெழு)

ஊரெழு அருள்மிகு கண்ணகை அம்மன் என்று வழங்கி வரும் ஸ்ரீ மீனுட்சி அம்பாள் தேவஸ்தானத்திற்கென புதிதாக உருவாக்கப்பட்டு அண்மையில் வெள்ளோட்டம் விடப்பட்ட சித்திரத்தேரின் தோற்றம். மயிலிட்டி வடக்கு சரவணன் கவின் கலையகத்தின் கலைஞர்களால் இச்சிரத்திரத்தேர் அமைக்கப்பட்டது.

# விஜயதசமி விழா

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை சிவயோக சுவாமிகள் மகளிர் ஆச்சிரமம் நாளைமறுதினம் பிற்பகல் 3 மணிக்கு விஜயதசமிவிழாவைக் கொண்டாடவுள்ளது.

அன்றையதினம் பிள்ளையார் களிகூடம் பாலர் வகுப்புக்களை ஆரம்பித்து தொடர்ந்துஅதனை இலவசமாக நடத்தவுள்ளதாக இவ்வாச்சிரமத்தினர் தெரிவித்தனர். (வெ)

ஃ ஃ ஃ

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் சரஸ்வதி பூசையை இன்று மேற்படி நிறுவனத்தில் கொண்டாடவுள்ளனர். (வெ)

ஃ ஃ ஃ

(மட்டுவில்)

மட்டுவில் தெற்கு சாந்தநாயகி தமிழ்க்கலவன் பாடசாலையின் கலைவிழா இன்று நடைபெறும்.

அதிபர் திரு. எஸ். கந்தையா தலைமையில் நடைபெறும் இக்கலை விழாவில் சாவகச்சேரிவட்டாரக்கல்வியதிகாரி திரு. ப. சச்சிதானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார். கடந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு இக்கலைவிழாவில் வட்டாரக் கல்வியதிகாரியினுல் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஃ ஃ ஃ

யாழ். திருமுறை மன்றத்தினரின் நவராத்திரி விழா நாளை இருநெல்வேலி வாலையம்மன் ஆலயத்தில் நடைபெறும்.

நாளைமறுதினம் விஜயதசமி அன்று அங்கு கர்நாடகசங்கீத இசைப்பயிற்சி வகுப்பை சங்கீதவித்துவான் கே. சித்திவிநாயகம் ஆரம்பித்து வைப்பார்.

ஃ ஃ ஃ

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நவராத்திரி விழா வருகிற ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

# நல்லூரில் சமயபாட வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினரின் நல்லூர் நாவலர் நிலையத்தில் சிறுவர் சிறுமியர்க்கான சைவ சமயபாட வகுப்புக்கள் எதிர்வரும் விஜயதசமியன்று பிற்பகல் ஆரம்பமாகின்றன. நாவலர், இந்து மகா வித்தியாலய முன்னுள் ஆசிரியர் திரு. சி. கார்த்திகேசு (சேந்தன்) இவ்வகுப்புக்களை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் பிற்பகல் நாலுமணி தொடக்கம் ஆறுமணிவரை நடத்துவார். (அ)

# பாடசாலைக்கு நன்கொடை

(மட்டுவில்)

இலங்கை கிராமிய மீளாய்வு நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை நவக்கிரியிலுள்ள பாலர் பாடசாலையைப் பொறுப்பேற்றுள்ளதைத் தொடர்ந்து, அப்பாலர் பாடசாலைக்குரிய தளபாடங்கள், விளையாட்டுச் சாதனங்கள், ஏனைய உபகரணங்கள் உட்பட 6000 ரூபா பெறுமதியான பொருட்களை யாழ். இலங்கை கிராமிய மீளாய்வு நிறுவனம் விரைவில் வழங்கவுள்ளது. (அ)

# வெள்ள வாய்க்கால் துப்புரவு

(நெல்லியடி)

கோப்பாய் கிராமசபை பிரதேசத்திலுள்ள ராசவீதி தொடக்கம் கோப்பாய் கடல் நீர் ஏரி வரையுள்ள வெள்ள வாய்க்காலை துப்புரவு செய்ய கோப்பாய் கிராமசபை முன்வந்துள்ளது.

மாரிகாலம் ஆரம்பித்துவிட்டதனுல் இவ்வேலைகளை அவசரமாக செய்து முடிக்க வேண்டுமென்று கோப்பாய் கிராமசபை விசேட ஆணையாளர் திரு. ஜே. எஸ். ஆனந்தம் பணித்துள்ளார்.

இத்திருத்த வேலையை சிரமதான அடிப்படையில் மேற்கொள்ளவும் ஆலோசனை செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வசூலில் பெரும் சாதனே! 3-வது வெற்றி வாரம்!
ஆஹா! இது என்ன பெண்கள் கூட்டம்? பெண்குலத்தின் பெருமையை எடுத்துக் காட்டும் கோகிலா. தமிழ் வசனநடைக்கு பெருமை தேடித்தந்த கலைஞர் கருணநிதி இவர்களைக் காண ராஜா வெண்திரையை நாடுங்கள். 20 நாட்களில் 1 லட்சம் பேர் பார்த்துவிட்டனர். இடத்துக்கு முந்துங்கள்.
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா—அசோகன்
மற்றும் பலர் நடித்த
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
CHARLES BRONSON in
FROM NOON TILL THREE
Color
(Strictly for Adults)
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

## மந்துவில் வீடமைப்புத் திட்டம்

(மட்டுவில்)
தேசிய வீடமைப்புத் திட்டத்தினுல்சாவகச்சேரித்தொகுதியில் அமைக்கப்படவுள்ள முப்பது வீட்டுத்திட்டமும் மந்துவில் கிராமத்திலேயேஅமைக்கப்படவுள்ளன. ஏற்கனவே தேசிய வீடமைப்புத் திட்டத்தினுல் அமைக்கப்பட்ட 20வீடு அமைப்புத்திட்டமும், மந்துவில் கிராமத்திலேயேஅமைத்து விநியோகம் செய்யப்பட்டதுப் குறிப்பிடத்தக்கது.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அரசகட்டளை

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 6-30, 930
சனி, ஞாயிறு 2-15
ரஜனிகாந்த் -
படாபட் ஜயலக்ஷ்மி
ஆறிலிருந்து
அறுபதுவரை

## "ஈழநாடு" வெற்றிக்கிண்ணம்: யங்ரேயல் விளையாட்டுக்கழக உதைபந்தாட்டப் போட்டி

(காங்கேசன்துறை)
காங்கேசன்துறை யங்ரேயல் விளையாட்டுக் கழகத்தின் 12வது ஆண்டு விழாவையொட்டி நடாத்தப்படவிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி அடுத்த மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகவுள்ளது.

'ஈழநாடு' வெற்றிக் கிண்ணத்துக்காகவும், ஏனைய 9 வெற்றிக் கிண்ணங்களுக்காகவும் வடபகுதியிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கென நடாத்தப்படவிருக்கும் இச்சுற்றுப்போட்டி 1-ம், 2-ம், 3-ம் பிரிவுகளாக நடாத்தப்படும். 1-ம் சுற்றுப்போட்டி 11 பேர், 7 பேர்கொண்ட இரு பிரிவுகளாக நடாத்தப்படும். எல்லாப் போட்டிகளும், 1-ம் பிரிவு 11 பேர் கொண்டபோட்டியைத் தவிர, ஏனையவை நொக்கவுட் முறையில் நடைபெறும்.

இச் சுற்றுப் போட்டியில் கடந்த வருடம் வடமாகாணத்தின் தலை சிறந்த கோஷ்டிகள் உட்பட 65 கழகங்கள் பங்குபற்றின. இப்போட்டிகளில் நடுநிலைமையாளர்களாக யாழ்ப்பாண மத்தியஸ்தர் சங்க மத்தியஸ்தர்களே கடமைபுரிவர். இறுதிப் போட்டிகள் 1981 தைப்பொங்கல் தினத்தன்று காங்கேசன்துறை பட்டின சபை மைதானத்தில் நடைபெறும். இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் சழகங்கள் விண்ணப்பப் பத்திரங்களை திரு. நா. நவரத்தினம், மக்கள் வங்கி, காங்கேசன்துறை என்ற விலாசத்துடன் தொடர்புகொண்டு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 30-10-1980 ம் திகதிக்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

கடந்த வருடத்தைவிட இவ் வருடம்இச்சுற்றுப்போட்டியை சிறப்பான முறையில் நடாத்துவதற்கு யங்ரேயல் நிர்வாக சபையினர் ஒழுங்குகள் செய்துள்ளனர். இச் சுற்றுப்போட்டியில் முதற்தடவையாக கிளிநொச்சி, வவுனியா மாவட்ட சழகங்கள் பங்குபற்றவிருப்பது குறிப்பபிடத்தக்கது.

## கடற்றெழிலாளர் முன்னேற்றக் கழகம்.

(பண்டத்தரிப்பு)
யாழ். மாவட்டத்திலுள்ள கடற்றெழிலாளர்களின் நலன் கருதி விரைவில் யாழ். மாவட்ட கடற்றெழிலாளர் முன்னேற்றக்கழகம் என்னும் புதியதொரு அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கிறது.

கடற்றெழிலாளர்களை எதிர் நோக்கும் வீடில்லாப் பிரச்னை காணிப்பிரச்னை மற்றும் சமூக பொருளாதார பிரச்னைகள் பற்றி ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளவும் கடலில் நடைபெறும் கோஷ்டிச் சண்டைகள் வலைத்திருட்டுகள் ஆகியனவற்றை தடுக்கவும் இப்புதிய அமைப்பு விரிவான முறையில் செயற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் யாழ். செல்மேரிஸ் பாலர் பாடசாலை மண்டபத்தில் வண். ஸ்ரனிலாஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றபோது சகல கடற்றெழிலார்களும் பங்குபற்றும் இப்புதிய அமைப்பை விரைவில் அங்குரார்ப்பணம் செய்வதென்றும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள விசேட குழு வொன்றும் தெரிவு செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## கட்டிடத் திறப்பு விழா

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலய புதிய கட்டிடத் திறப்பு விழாவும், பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் அருட் சகோதரி மேரி கத்தரின் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம அதிதியாக வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு கலந்து கொள்வார். பரிசில்களை பண்டத்தரிப்பு வாழ்வொளி நிலைய இயக்குநர் அருட் சகோதரி ஜூலாலி வழங்குவார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (அ)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
இன்று குதூகல ஆரம்பம்!
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30 மணிக்கு 4 காட்சிகள்
கீதாலயா மூவிஸ்
அளிக்கும்
மாத்தளை கார்த்திகேசுவின்
டீன்குமார்,
K.S. பாலச்சந்திரன்,
பரீனலை,
விஜயராஜா
நடித்த

'அவள் ஒரு ஜீவநதி' சிறந்த தமிழ் திரைக் காவியம்.

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-பத்மினி
விஜயா-நாகேஷ்
பாலாடை

ஸ்ரீதர் - யாழ்நகர்
தினசரி 10-30, 2-30 6-30 & 9-45.
பலகால இடைவெளியின்பின் மக்கள் திலகத்தின் புதுப் படத்தினைக் காணும் சந்தர்ப்பம்!
புரட்சி நடிகர்
தமிழக முதல்வர்
எம்.ஜி.ஆர்.
புரட்சிக் கன்னி
லதா
வில்லனுக்கோர்
சக்கரவர்த்தி
நம்பியார்
நாகேஷ்,
தேங்காய்,
நிர்மலா,
கண்ணன்
வி. கே.
ராமசாமி
மற்றும் பலர்
நடித்த

மீனவ நண்பன்

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி-ஞாயிறு 4 காட்சிகள்
கே. பி. சுந்தராம்பாள்
ஒளவையார்

லிடோ
(யாழ்நகர்)
Daily at: 10-30 am, 2-15pm, 4-45 pm, 7-15 pm, & 9-30 pm
RIVER OF THE GREAT CAYMAN

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
100-வது வெற்றித் திருநாளை நோக்கி......
"வெள்ளி விழா"
நீயா?
வண்ணச்சித்திரம்
Next Attraction: "THE DIRTY DOZEN"
எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயதசமியில்
படிப்பைத் தொடங்க
பாலர்கள் விரும்புவது
**வண்ணத்தமிழ்**
**அரிச்சுவடி**
அழகான வண்ணப்படங்களுடன்
விலை ரூபா 2/-
**காந்தளகம்**
213, காங்கேசன்துற வீதி,
யாழ்ப்பாணம்.

**ஈழநாடு**
**The Eelanaadu** 60 சதம்

## கலைமகள் விழா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் சிங்கள மகா வித்தியாலயத்தில், கலைமகள் விழா இன்று காலை சிறப்பாகக் கொண்டாடப்படும்.

பூசை, வழிபாட்டுடன் ஆரம்பமாகும் கலைமகள் விழாவில்: மாணவ மாணவிகளின் பல சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

## மொகதராபாத். இந்திரா பார்வையிட்டார்

புதுடில்லி, அக். 16
மொகதராபாத்தில் கடந்த ஆகஸ்ட் மாதக் கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட பகுதிகளை இந்தியப்பிரதமர் திருமதி இந்ராகாந்தி நேற்று சென்று பார்வையிட்டனர்.

அமைதியையும் ஒற்றுமையையும் பாதுகாக்குமாறு அப்பகுதி மக்களை பிரதமர் கேட்டுக்கொண்டார். (வே)

# பூநகரி ஒல்லாந்தர் கோட்டை சுற்றுலா விடுதியாகும்

## ரூ. 50,000 ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)
பூநகரியிலுள்ள ஒல்லாந்தர் கோட்டை நவீன சுற்றுலா விடுதியாக மாற்றியமைக்கபபடவுள்ளது அதற்காக 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளது.

மேற்படி கோட்டையை நவீன சுற்றுலாலா விடுதியாக மாற்றியமைக்க பண ஒதுக்கீடு செய்து தரும்படி யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் யாழ். அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி உள்ளூராட்சி அமைச்சரிடம் விடுத்துள்ள வேண்டுகோளையடுத்தே 50 ஆயிரம் ரூபா பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இக்கோட்டையின் புனருத்தாரண வேலைகள் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ்: கணேஸ், பூநகரி உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. வைத்திலிங்கம் ஆகியோர் மேற்படி புனருத்தாரண வேலைகளுக்குப் பொறுப்பாகவிருப்பார். (கொ)

# யாழ். மாநகரசபை சுகாதார வாரம் கொண்டாட முடிவு!

## சபை நிதியிலிருந்து 10,000 ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரில் ஒரு வார காலம் சுகாதார விழாவும் பொருட்காட்சியும் கலை நிகழ்ச்சியும் நடத்துவதென்றும், இதற்கு சபை நிதியில் இருந்து 10,000 ரூபா செலவிடுவதென்றும் நேற்றுமுன்தினம் நடந்த மாநகரசபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

நகரமுதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. எட்வார்ட், சுகாதாரவாரம் கொண்டாடுவதென்ற சுகாதாரக்குழுவின் முடிவை ஏற்பதென்றும், இதற்கென சபை நிதியிலிருந்து பத்தாயிரம் ரூபாவை ஒதுக்குவதென்று கோரும் பிரேரணையை கொண்டுவந்தார். இதனை திரு. சீவரத்தினம் வழிமொழிந்தார். இதுபற்றி நகரமுதல்வர் திரு. இராஜாவிஸ்வநாதன் தெரிவிக்கையில், சுகாதாரக் குழுவினர் சுகாதார விழா ஒன்றை இம்மாதம் 27ம் திகதி முதல் நவம்பர் 2ம் திகதி வரை நடத்தவேண்டும் என தீர்மானம் எடுத்துள்ளனர் என்று கூறினர்.

இம்மாதம் 8ம் திகதி சகல குழுக் கூட்டங்களிலும் இம் முடிவு பரிசீலனை செய்து, சுகாதாரவிழாவை கொண்டாடவேண்டும் என முடிவு எடுத்துள்ளனர் என்றும் முதல்வர் தெரிவித்தார்.

துணை முதல்வர் திரு. சேவியர் கூறியதாவது:

"மக்களுக்கு சுகாதாரம் பற்றி பிரசாரம் செய்வதற்கு சுகாதாரவாரம் கொண்டாடப்படுகிறது. பாடசாலைப் பிள்ளைகள், ப. நோ. கூ. சங்கங்கள் இதில் சம்பந்தப்பட்டுள்ளனர். கட்டுரைப்போட்டிகளும் நடாத்தப்படவிருக்கின்றன.

"23 வட்டாரங்களும் ஏழு பகுதியாக பிரிக்கப்பட்டு பாடசாலைப் பிள்ளைகள், தினமும் உறுப்பினர்களுடன் சேர்ந்து வடிகால்களை, வீதிகளை சுத்தம் செய்வார்கள். பிள்ளைகள் வீடு தோறும் சென்று சுகாதாரம் பற்றி எடுத்துக்கூறுவார்கள்.

"மக்களிடமிருந்தும் வர்த்தகர்களிடமிருந்தும் பொது நிதியாக 10,000 ரூபா சேர்க்கப்பட்டுள்ளது. இதில் 6000 ரூபா கிடைத்துவிட்டது. சுகாதார விழாவில் தினமும் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும்.

"யாழ் திறந்தவெளி அரங்கில், அல்லது நகரமண்டபத்தில் கலைநிகழ்ச்சிகளை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாடசாலைப் பிள்ளைகளின் சுகாதாரம் தொடர்பான நடனம், நாடக பேச்சுக்களும் இடம் பெறும்.

"யாழ். பொதுசன நூலகத்தில் 5 நாட்கள் சுகாதார பொருட்காட்சியொன்றும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது, இப்பொருட்காட்சியில் சுகாதாரம் தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்படும். வர்த்தகர்களும் கலைநிகழ்ச்சியளிக்கமுன் வந்துள்ளனர்.

"சுகாதாரவிழாமலர் ஒன்று வெளியிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.".

"இவ்வாவிற்கு 25,000 ரூபா தேவைப்படுமென்றும் மக்களிடமிருந்து 10,000 ரூபா கிடைத்துள்ளதாகவும் துணை முதல்வர் திரு. சேவியர் தெரிவித்தார்.

தற்போதுசபை 10,000 ரூபா வழங்குவதென்றும். அத்துடன் மக்களிடம் சேர்த்த பணத்தையும் கொண்டு செலவு செய்வதென்றும், செலவு கூடுமானால், அதனையும் சபை வழங்குவதென்ற திருத்தப் பிரேரணையொன்றை திருமதி அந்தோனியா சுவாமிநாதர் பிரேரிக்க திரு. என். ரி. செல்லத்துரை வழிமொழிந்தார். சபை ஏகமனதாக ஏற்றது.

(வேலணை)
இந்தியாவில் இயங்கிவரும் தமிழர் நட்பு மன்றத்தின் இலங்கைத் தொடர்புச் செயலாளராக வேலணையைச் சேர்ந்த எஸ். ஐ. ஜெகதீசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மக்கினொன் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ∘ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
∘ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ∘ பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினொன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினொன் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.

## நீதிமன்ற ..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக்காட்டி திரு. அமிர்தலிங்கம் இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது தீர்மானமாதலால் அதனை விவாதிக்க முடியாது என்றார்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

"நான் இந்த சபையில் முன்னர் இரண்டு தடவைகள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சனைகள் சட்டமூலம் தொடர்பானவை, ஆனால் இது தீர்மானம் தொடரபானது. எனவே முந்திய திர்ப்பு இதற்குப் பொருந்தாது.

"இந்த விவகாரத்தைப் பின் போடுவதால் எவருக்கும் தீங்கு ஏற்படாது. நீதிமன்றத்தில் நான்கு வாரங்கள் தான் விசாரணை நடக்கும். எனவே அது வரை பின்போடுவதால் எந்த தீங்கும் ஏற்படாது.

"தனிப்பட்ட எவரையோ அல்லது கட்சியையோ கருத்தில் கொள்ளாமல் ஜனநாயக அடிப்படையைக் கருத்தில் கொண்டு இது விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும்" என்றார்.

### சிவா கேள்வி

நல்லூரர் எம். பி. திரு. சிவசிதம்பரம், எதிர்க் கட்சித் தலைவரின் ஒழுங்குப் பிரச்சனைக்கு ஆதரவாகப் பேசுகையில் "ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சுகள் தவறானது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தால் என்ன செய்வீர்கள்" என்று கேட்டார்.

### பிரதமர் பதில்

அதற்குப் பதிலளித்த பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா, "அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கமையவே நாம் இங்கு பிரேரணையைச் சமர்ப்பித்துள்ளோம். பாராளுமன்ற நிரந்தர விதிகள் எப்படியிருப்பினும் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் இதை விவாதிக்குமாறே நாம் கோருகிறோம்') என்றார். (ம-கு.

## சிறிமா...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

### சிறிமா வந்தார்

பாராளுமன்றம் கூடுவதற்கு தினைந்து நிமிடங்களுக்குமுன்னர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும், திரு. அனுரா பண்டாரநாயக்காவும் காரில் வந்து சேர்ந்தனர். இவர்களைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர்கள் அனைவரும் வந்தனர். திருமதி சிறிமா வந்த காருக்கு முன்பாக பாதுகாப்புப் பொலிஸார் வந்தனர்.

### கூட்டணி எம். பி.க்கள்

பாராளுமன்றத்துக்குநேற்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் எல்லா எம். பி.க்களும் சமூகமளித்திருந்தனர்.

### பலத்த பாதுகாப்பு

பாராளுமன்றத்துக்கு வெளியில் மட்டுமின்றி, உள்ளேயும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வழக்கமாக எந்த நேரமும் சுதந்திரமாக பாராளுமன்றத்துக்குள் அனுமதிக்கப்படும் செய்தியாளர்கள் கூட நேற்றுப் பகல் 2-30க்குத்தான் அனுமதிக்கப்பட்டனர். பாராளுமன்றத்துக்குவெளியே ஒரு பக்கம் கொள்ளுப்பிட்டியிலிருந்து பாராளுமன்றம் வரையும்; மறுபக்கம் லேக்ஹவுஸிலிருந்து பாராளுமன்றம் வரையும் அடுத்ததிசையில் சிலிங்கோ மாளிகையிலிருந்து பாராளுமன்றம்வரையும் ஜனநடமாடத்துக்குத் தடைவிதிக்சப்பட்டிருந்தது. ஜனாதிபதிமாளிகை முன்பாக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பாராளுமன்றம் நேற்று பகல் சரியாக மூன்று மணிக்கு கூடியதும் சபாநாயகர் பிரதமரை நோக்கி பிரேரணையைத் தாக்கல்செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் எழுந்து தாம் ஒரு ஒழுங்குப் பிரச்சனையைக் கிளப்புவதாகக் கூறினார்.

## எனது விலங்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும், 21 ஆண்டுகள் எம். பி. யாகவும் இருந்த நான் தாய் நாட்டுக்காக பல சேவைகளைச் செய்துள்ளேன்.

இச்சபையில் இன்று நீதியரசர்களாக விளங்கும் ஒவ்வொரு உறுப்பினர்களும் இச்சமயத்தில் உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுப்பாருங்கள்.

எனக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாக உங்களால் வாக்களிக்க முடியாது. எனினும் வாக்களித்த பின்னரும் கூட இன்று இரவு உங்களால் தூங்க முடியாது. மனச்சாட்சி உங்களை உறுத்திக்கொண்டேயிருக்கும்.

இச்சமயத்தில்நியாயம்விரும்பும் அனைவருக்கும் குறிப்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. க்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன்."

திருமதி பண்டாரநாயகா தமது பேச்சின் போது ஓரிடத்தில் தமது கண்களைத் துடைத்துக்கொண்டார்.

## இளமையிலே...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுபவங்களையும் தம்முடன் கூட எடுத்துச் செல்வர் என்பது நிச்சயம். இத்தகைய போட்டிகள் பல்வேறு பகுதிகளிலும் பரந்திருக்கும் கலையார்வம் கொண்ட மாணவர்களை இணைத்து வைக்கும் சாதனமாக விளங்குகின்றன. இதன் மூலம் பலகலைஞர்களையும் உருவாக்க முடியும்" (அ)

## வகுப்புக்கள்

அகில இலங்கை இளங்கலைஞர் மன்ற மியூசிக் அக்கடமியின் சங்கீத, நடன, வயலின், வீணை, மிருதங்க வகுப்புக்கள் 19-10-80 விஜயதசமியன்று ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகும். புதிய மாணவ மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 7117

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்[illegible] மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அக். 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registred as a News Paper at General Post Office Sri Lank under No. GB 8948/78 The Eelanaadu P.B. No 49 Tgrame Eelanaadu, Phone,389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org